Generated by Foxit PDF Creator © Foxit Software
http://www.foxitsoftware.com For evaluation only.



TANRECTA SPEAKS JANUARY - 2020

Newspaper Reg.No.TNBIL/2003/12746, licensed to post with
prepayment with postal Reg. No. Try/041/2020 - 2022
Posted at RMS, Trichy Junction, Trichy-620 001
Date of Posting - 5th of Every Month

To

டெலிவரி ஆகாவிடில் கீழ்காணும் முகவரிக்கு தயவு செய்து திருப்பி அனுப்பவும்
**தி பிரிண்டிங் ஹவுஸ், காஜாமலை, திருச்சிராப்பள்ளி - 620 023.**

**பதிப்பாசிரியர் குழு**

1. **முனைவர் T.N. கோகுல்நாத் பாபு,** மாநிலத் தலைவர்
2. **பேரா. இ.பி. பெருமாள்,** மாநில பொதுச் செயலாளர், பதிப்பாசிரியர்
3. **பேரா. எம். பாலசுப்ரமணியன்,** மாநிலப் பொருளாளர்
4. **முனைவர் ந. மாரிசாமி,** மாநிலத் துணைத் தலைவர்
5. **முனைவர் ம.இராஜகோபால்,** மாநிலத் துணைத் தலைவர்
6. **பேரா. பார்வதி கோபாலன்,** மாநிலத் துணைத் தலைவர்
7. **பேரா. S. சிவசண்முகம்,** மாநில இணைச் செயலாளர்
8. **பேரா. S. சந்திரா,** மாநில மகளிர் ஒருங்கிணைப்பாளர்

**TANRECTA SPEAKS - TNBIL/2003/12746**

Owned, Edited and Published by Prof. E. P. Perumal, The General Secretary, Tamil Nadu Retired College Teachers' Association.

Printed by S. Zeenath Beevi at The Printing House, No.6, Race Course Road, Khajamalai, Trichy-620 023. Ph : (0431) 2420121, 94435 87233
Email : tanrectatrichy@gmail.com

# TANRECTA SPEAKS



Voice - XVIII JANUARY - 2020 Speech 7

Published on 5th of Every Month

## தமிழ் நாடு ஓய்வு பெற்ற கல்லூரி ஆசிரியர் கழகம்

TANRECTA

பதிவு எண். 236/2000



*பேரா. நரசிங்கம்*

**Tamil Nadu Retired College Teachers' Association**
Newspaper Regn. No. TNBIL/2003/12746
Website: www.tanrecta.org
Rs. 4 per copy - Subscription (Annual) Rs. 40

Muthukkalathi Street,
Tiruvallikkeni,
Chennai - 600 005

Generated by Foxit PDF Creator © Foxit Software
http://www.foxitsoftware.com For evaluation only.



## தலைவர் பக்கம்

அன்புள்ள பேராசிரியர்க்கு, வணக்கம்.

அனைவருக்கும் இனிய புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துகள்.

நன்றி.

தோழமையுடன்,
**து.ந.கோகுல்நாத் பாபு,**

**எனது முகவரி :** 43/3, மஹால் 2வது தெரு,
மதுரை- 625001
கைப்பேசி: 8428254243

---

### மாநில செயற்குழுக் கூட்டம் அழைப்பு

இடம் : அருண் ஹோட்டல் மினி ஹால், திருச்சி.
நாள் : 25.01.2020 முற்பகல் 9.00 மணி.
தலைமை : முனைவர் டி.என். கோகுல்நாத்பாபு,
மாநிலத்தலைவர்.
பொருள் :
1. இரங்கல்.
2. தலைமையுரை.
3. இயக்க அறிக்கை, நீதிமன்ற நடவடிக்கைகள்.
4. தேர்தல் குழு அறிக்கை .
5. நீதியரசர்ஆலோசனை
6. தீர்மானங்கள்.
7. பிற

ஆட்சிக் குழு உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்துகொண்டு கூட்டத்தை சிறப்பிக்கவும்.

வாழ்த்துக்களுடன்,
தோழமையுடன்,
**(இ.பி. பெருமாள்)**
பொதுச்செயலாளர்

**அனைவருக்கும் இனிய புத்தாண்டு மற்றும்**
**பொங்கல் நல்வாழ்த்துக்கள்**
**- ஆட்சிக்குழு**





## பொதுச்செயலர் கடிதம்

இனிய பேராசிரியர்க்கு, வணக்கம்.

புத்தாண்டு பிறந்துள்ளது. அனைவரது வாழ்விலும் மகிழ்ச்சியும் உற்சாகமும் பெருகி சிறப்பான வாழ்வு அமைய தமிழ்நாடு ஓய்வுபெற்ற கல்லூரி ஆசிரியர் கழகம் வாழ்த்துகிறது. அதே போன்று பொங்கல் திருநாள் தமிழர்கள் வாழ்வில் புத்தொளியை ஏற்படுத்தும் நன்னாள். என்றைக்கும் வாழ்வில் வளம் அமைய பொங்கல் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம். தேசிய குடியுரிமை திருத்த சட்டத்தை எதிர்த்து மாணவர்கள் மற்றும் மக்கள் தங்களது எதிர்ப்பை தெரிவித்து நாடு முழுவதும் போராட்டம் நடத்திக் கொண்டுள்ளனர். வடகிழக்கு மாநிலங்களில் இச்சட்டத்திற்கு எதிராகப் போராட்டம் நடைபெறுகிறது.

அடுத்ததாக அகில இந்திய அளவில் 2020 ஜனவரி 8ம் தேதி நாடு தழுவிய வேலை நிறுத்தம் நடைபெறும் என அனைத்து தொழிற்சங்கங்களும் சேர்ந்து அறிவித்துள்ளன. தொழிலாளர்கட்கான உரிமை கோரியும் நாட்டின் நலன் முன்னிறுத்தியும் கோரிக்கைகள் உள்ளன. இப்போராட்டம் வெற்றி பெற நமது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம். தமிழகத்தில் ஊராட்சி அமைப்புகட்கு தேர்தல் 2019 டிசம்பர் 27 மற்றும் 30 ஆகிய நாட்களில் நடைபெற்றது. காலங்கடந்து நடைபெறும் தேர்தல் பெரும்பாலும் அமைதியாக நடந்து முடிந்துள்ளது. சில இடங்களில் மட்டும் வாக்குப்பெட்டி எரிப்பு சம்பவம் நடைபெற்றுள்ளது. வாக்கு எண்ணிக்கை 2020 ஜனவரி 2ம் தேதி நடைபெற உள்ளது.

நீதிமன்றம் நமக்கு வழங்கிய ஆலோசனைகளின் காரணமாக மாநிலப் பொறுப்பாளர்கட்கான தேர்தல் நடைபெறவில்லை. மாநில செயற்குழு இம்மாதம் 25ம் தேதி திருச்சியில் கூடி முடிவுகளை மேற்கொள்ள உள்ளது. 2020ஆம் ஆண்டு நிறைவேறாத கோரிக்கைகளை நிறைவேற்றம் காணும் ஆண்டாக அமையட்டும்.

வாழ்த்துகளுடன் தோழமையுள்ள,
பேரா. **இ.பி. பெருமாள்,**
பொதுச்செயலர்

**எனது முகவரி :** 3/671 முதல் தெரு, ஜீவா நகர்,
கலெக்டரேட் (அஞ்சல்), தருமபுரி – 636705.
தொலைப்பேசி 04342 – 230397 செல் : 9443334397
E.Mail : perumalep@hotmail.com

## மாநிலப் பொருளாளர் அறிக்கை - ஜனவரி - 2020

இனிய பேராசிரியர்க்கு, வணக்கம்.

நமது கழக உறுப்பினர்கள் அனைவருக்கும் ஆங்கிலப் புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துக்கள். நமது கழகத்தின் கிளைகளிலிருந்து டிசம்பர் 2019 ல் பெறப்பட்ட உறுப்பினர் கட்டணம், செய்திமடல் நிதி, அறக்கட்டளை நிதி, கழக வளர்ச்சி நிதி, கட்டிடநிதி, AIFRUCTO ஆயுள் சந்தா மற்றும் ஆண்டு சந்தா பற்றிய விபரங்கள்:

**சேலம் கிளைப்** பொருளாளரிடமிருந்து 2019-20க்கு கட்டிடநிதியாக ரூ. 4000/ம், (Dr. P மாது) , அறக்கட்டளை நிதியாக ரூ.500/ம், கழக வளர்ச்சி நிதியாக ரூ. 500/ம் (Dr. P மாது) என ஆக மொத்தம் ரூ. 5000/- பெறப்பட்டுள்ளது.

**மதுரைக் கிளைப்** பொருளாளரிடமிருந்து 2019-20 க்கு அறக்கட்டளை நிதியாக ரூ. 500/ம், கழக வளர்ச்சி நிதியாக ரூ.500/ம் (Prof. S மகா தேவன்) என ஆகமொத்தம் ரூ.1000/- பெறப்பட்டுள்ளது.

**கும்பகோணம் கிளைப்** பொருளரிடமிருந்து 2019-20க்கு 2 உறுப்பினர்களின் கட்டணம் ரூ.300/- பெறப்பட்டுள்ளது.

**தஞ்சாவூர்க் கிளைச்** செயலரிடமிருந்து 2019-20 க்கு 50 உறுப்பினர்களின் கட்டணம் ரூ. 7500/ம், AIFRUCTO ஆண்டு சந்தா 50 உறுப்பினர்களுக்கு 1250/ம் என ஆக மொத்தம் ரூ. 8750/- பெறப்பட்டுள்ளது. மேலும் 1 உறுப்பினரின் கட்டிடநிதியாக ரூ.5,000/-ம் பெறபட்டுள்ளது. (Prof.G. கல்யாண சுந்தரம்)

**தூத்துக்குடி கிளைச்** செயலரிடமிருந்து 2019-20 க்கு கட்டிட நிதியாக ரூ. 3600/ம், (J.V. Kavalam 1st Installment) அறக்கட்டளை நிதியாக 2 உறுப்பினர்களிடமிருந்து ரூ. 1000/ம், கழக வளர்ச்சி நிதியாக 2 உறுப்பினர்களிடமிருந்து ரூ. 1000/ம் என ஆக மொத்தம் ரூ. 5600/- பெறப்பட்டுள்ளது. (Prof Rajamanickam, Dr. Baskara Paul Pandiyan)

**ஈரோடு கிளைப்** பொருளரிடமிருந்து 2019-20க்கு 2 உறுப்பினர்களின் கட்டணம் ரூ. 300/ம், 1 புதிய உறுப்பினரின் செய்தி மடல் நிதியாக ரூ.200/ம் என ஆகமொத்தம் ரூ.500/ பெறப்பட்டுள்ளது. (Dr. A. Sengottaian)

**திருவண்ணாமலை கிளைச்** செயலரிடமிருந்து 2019-20 க்கு கிளையின் சார்பாக கட்டிட நிதியாக ரூ.20,000/ம் (2 ஆம் தவணை) AIFRUCTO ஆயுள் சந்தா 3 உறுப்பினர்களுக்கு ரூ. 3000/ம் என ஆக மொத்தம் ரூ.23,000/ பெறப்பட்டுள்ளது. (Prof C. Velusami, Dr. M. Prabagaran, Dr. R. Rajasekaran.)

**விருதுநகர் கிளைச்** செயலரிடமிருந்து 2019-20 க்கு 8 உறுப்பினர்களின் கட்டணம் ரூ. 1200/ம், 1 புதிய உறுப்பினருக்கான செய்திமடல் நிதி ரூ.200/ம், அறக்கட்டளை நிதி ரூ.500/ம், கழக வளர்ச்சி நிதி ரூ.500/ம், AIFRUCTO ஆயுள் சந்தா 1000/ம் என ஆக மொத்தம் ரூ.3400/- பெறப்பட்டுள்ளது. (Dr. P. Selvarathi).

**விழுப்புரம் கிளைப்** பொருளரிடமிருந்து 2019-20க்கு 12 உறுப்பினர்களின் கட்டணம் ரூ. 1800/ம், AIFRUCTO ஆண்டு சந்தா 12 உறுப்பினர்களுக்கு ரூ. 300/ம், ஒரு புதிய உறுப்பினரின் செய்தி மடல் நிதி ரூ.200/ம் என ஆக மொத்தம் ரூ. 2300/ - பெறப்பட்டுள்ளது. (Prof. R. Muthulakshmi).

**கோவை - நீலகிரி** கிளைப் பொருளரிடமிருந்து 2018-19 க்கு 17 பேர், 2019-20 க்கு 101 பேர் என 118 உறுப்பினர்களின் கட்டணம் ரூ.17700/ம், செய்திமடல் நிதியாக



Generated by Foxit PDF Creator © Foxit Software
http://www.foxitsoftware.com For evaluation only.



2 புதிய உறுப்பினர்களுக்கு (Dr. V. Sengodan, Dr. G. Parvatham), ரூ.400/ம், அறக்கட்டளை நிதியாக 3 உறுப்பினர்களுக்கு ரூ. 1500/ம் கழக வளர்ச்சி நிதியாக 3 உறுப்பினர்களுக்கு ரூ. 1500/ம் (Dr. M. Rajagopal, Dr. V. Sengodan, Dr. G. Parvatham) 2019-20 க்கு 58 உறுப்பினர்களின் AIFRUCTO ஆண்டு சந்தா ரூ. 1450/ம், கட்டிட நிதியாக 33 உறுப்பினர்களிடமிருந்து ரூ. 1,65,000/ம், AIFRUCTO ஆயுள்சந்தா 39 உறுப்பினர்களிடமிருந்து ரூ. 39,000/ம் என ஆக மொத்தம் ரூ. 2,26,550/- பெறப்பட்டுள்ளது.

**கட்டிட நிதி:** M/S B. Sarada - 1000. R. பத்மாவதி - 3000, C.சுப்பிரமணியன் - 6000, K.S. கமலேஸ்வரன் - 10000, தலா ரூ. 5000/ செலுத்தியவர்கள். M. சுப்பையா, M. மனோன்மணி, B. தருமன், P. சங்கரி, M. நாகரத்தினம், S. பெலிசியா, B. ஸ்ரீ காந்தன் நாயர், G. கஸ்தூரிபாய், K. சுந்தரம், N. கிருஷ்ணன், P. பெருமாள், V.S. பெரியநாயகி, S. ஸ்ரீநிவாசன், K. திருமாறன், K. சுப்பையன், C. கருப்பண்ணன், K. சுப்பிரமணியன்(M.V), M. ஜெயராமன், A. ஞான சேகரன், S. நடராஜன், B. தங்கராஜ், T. ஜோதிமணி, M. வீரபத்திரன், S. சாந்தகுமாரி, M. பத்மாவதி, K. வெள்ளிமலை, I.C. காமராஜ், K. இந்திரா, K. பகவதி)

**AIFRUCTO ஆயுள் சந்தா (தலா ரூ. 1000) :** M/S K. தேன்மொழி ராதா கிருஷ்ணன், M. சுப்பையா, M. மனோன்மணி, B. தருமன், P. சங்கரி, K.L. கருப்புசாமி, ஜெயந்தா ஸ்ரீ பாலகிருஷ்ணன், M. நாகரத்தினம், S. பெலிசியா, B. ஸ்ரீ காந்தன் நாயர், G. பர்வதம், G. கஸ்தூரி பாய், B.N. பாலகிருஷ்ணன், M. செல்வநாயகி, N. கிருஷ்ணன், P. பெருமாள், K. பிரகாசம், N. வேலுசாமி, K. சுப்பையன், C. கருப்பண்ணன், B. சாரதா, K. சுப்பிரமணியன் (M.V), K.P. காந்திமதி, M. ஜெயராமன், C. சுப்பிரமணியன், S. மைக்கேல் ஜோசப், A. ஞான சேகரன், V. செங்கோடன், S. நடராஜன், M. வீரபத்திரன், S. சாந்தகுமாரி, P. சகுந்தலா, B. ராமச்சந்திரமூர்த்தி, N.S. இராஜமன்னார், K. வெள்ளிமலை, V. ஜெயலெட்சுமி, I.C. காமராஜ், K. இந்திரா, K. பகவதி)

**கட்டிட நிதி:**

| | |
|---|---|
| 11/2019 மாதம் வரை கட்டிட நிதி | : ரூ. 33,45,275 |
| 12/2019 மாதம் பெறப்பட்ட நிதி | : ரூ. 1,97,600 |
| ஆக மொத்தம் | : ரூ. 35,42,875 |

தஞ்சாவூர் மாநில மாநாட்டில் அறக்கட்டளை நிதி உதவி பெற்ற கீழ்க்கண்ட கிளைகள் பெற்ற தொகைக்கான அசல் ரசீதுகளை அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். 1. மயிலாடுதுறை, 2. தூத்துக்குடி, 3. செய்யாறு, 4. மதுரை, 5. தஞ்சாவூர், 6. கும்பகோணம்.2019-20 க்கு சந்தா தொகையைப் பெற்று அனுப்புமாறும், புதிய உறுப்பினர்களிடமிருந்து அவசியம் அறக்கட்டளை, கழக வளர்ச்சி நிதிகளைப் பெற்று அனுப்புமாறும் கேட்டுக் கொள்கிறேன். தங்களது தொகைகளை அனுப்ப வேண்டிய முகவரி:- இந்தியன் வங்கி, திருவானைக் கோவில், திருச்சி. S.B A/c No: 935236819. IFSC Code: IDIB 000S110.

**எனது முகவரி :** 3/175, G.R.T. நகர்,
திருவாரூர் - 610 001. செல் : 9443976222
E.mail : indirabalu1@gmail.com

அன்புடன்
பேரா.M.**பாலசுப்பிரமணியன்**
மாநிலப் பொருளர்

**தமிழ்நாடு ஓய்வு பெற்ற கல்லூரி ஆசிரியர் கழகம்**

பதிவு எண் 236/2000

தலைமைக் கழகம்

முத்துகாளத்தி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005

செல் 9443334397. e.mail: perumalep@hotmail.com

தருமபுரி.

23.12.2019.

**சுற்றறிக்கை 11/2019**

இனிய பேராசிரியர்க்கு! வணக்கம்.

இனிய கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள். வருகின்ற 2020, 21,22 ஆம் ஆண்டுகளுக்கான மாநிலப் பொறுப்பாளர்கட்கான தேர்தல் பணிகள் தொடங்கி நடைபெற்றுக் கொண்டுள்ளபோது வேட்பு மனு நிராகரிக்கப்பட்ட பேரா. வி. சுவாமிநாதன் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் தேர்தலை நிறுத்தக்கோரி வழக்கு தொடர்ந்தார். நமது அமைப்பின் சார்பில் கேவியட் தாக்கல் செய்த காரணத்தால் நீதியரசர் நமது கருத்தைக் கேட்டு அன்றைய நாளில் தேர்தலை நிறுத்தும்படி கூறாமல் வழக்கு அடுத்த நாள் தொடர்ந்தது. விசாரணையும் விவாதங்களும் மூன்றாம் நாளும் தொடர்ந்த நிலையில் நீதியரசர் நமது வழக்கறிஞரிடம் இரண்டு ஆலோசனைகளை வழங்கினார். 1.கட்டிட நிதி, வளர்ச்சி நிதி, நரசிங்கம் அறக்கட்டளை நிதி மற்றும் AIFRUCTO கட்டணம் ஆகியவற்றை செலுத்தியிருந்தால் மட்டும் போட்டியிடத் தகுதிபெற்றவர் என்பதை மாநிலப் பொதுக்குழுவை கூட்டி, அமைப்பு விதிகளில் இந்த நிபந்தனைகளை சேர்த்து திருத்தம் நிறைவேற்றி கூட்டுறவு சங்கங்களின் பதிவாளரிடம் ஒப்புதல் பெற்று தேர்தலை நடத்துவது, 2. உறுப்பினர் கட்டணம் செலுத்தி 50% கூட்டம், இயக்க நடவடிக்கைகளில் பங்கேற்றிருக்க வேண்டும் என்பதைக் கொண்டு தேர்தல் நடத்துவது என்பதாகும். இவற்றில் ஒன்றை தேர்ந்தெடுக்க வழக்கறிஞரிடம் கூறியுள்ளார். வழக்கறிஞர் நம்மிடம் கூறினார். நான் உடனடியாக முடிவைக் கூறமுடியாது, மாநில செயற்குழுவைக் கூட்டவேண்டும். செயற்குழு உறுப்பினர்கள் கிளைகளின் பொதுக்குழுக் கருத்தைக் கேட்டு மாநில செயற்குழுவிற்கு வரவேண்டும். எனவே இதற்கு ஒரு மாத கால அவகாசம் தேவை எனக் கூறிய பின் தேர்தல் நடத்துவதை நிறுத்தவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இவற்றை ஏற்று நீதியரசரிடம் இக்கருத்துக்களை எழுத்து மூலம் தந்தார். நீதியரசர் வழக்கை 2020 பிப்ரவரி முதல் வாரத்திற்கு தள்ளிவைத்தார்.

எனவே தற்போது மாநிலப் பொருப்பாளர்கட்கான தேர்தல் நிறுத்தப்பட்டுள்ளது. மாநில செயற்குழுவைக் கூட்டி மேற்கூறிய இரண்டில் ஒன்றை முடிவு செய்து நீதியரசரிடம் தெரிவித்த பின்பு தேர்தலை நடத்தவேண்டும். எனவே செயற்குழு உறுப்பினர்கள் கிளைகளின் கருத்தை கேட்டு வருமாறு வேண்டுகிறோம். மாநில செயற்குழு "எல்லா கிளைச் செயலர்களும் 9 மாநிலப் பொறுப்பாளர்களும் கொண்டது" என அமைப்பு விதி கூறுவதால் கிளைச்செயலாளர்கள் தவறாமல் மாநில செயற்குழுக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு வேண்டுகிறேன். மாநிலப் பொறுப்பாளர்கள் மற்றும் கிளைச் செயலாளர்கள் வருகையை பதிவுசெய்து முடிவினை நீதிமன்றத்திற்கு



Generated by Foxit PDF Creator © Foxit Software
http://www.foxitsoftware.com For evaluation only.



தெரிவிக்க வேண்டியுள்ளது. எனவே கிளைச் செயலாளர்கள் தவிர மற்றவர் யாரும் பதிவு செய்யமுடியாது.

**செய்ய வேண்டியது** : இம்மாதம் 2020 ஜனவரி மாத மாதாந்திர கிளைப்பொதுக்குழு கூட்டத்தில் மேற்கூறியுள்ள நீதிபதியின் ஆலோசனை இரண்டையும் பொதுக்குழுவின் நிகழ்ச்சி நிரலில் சேர்த்து கருத்துக் கேட்டு தீர்மானம் நிறைவேற்றி மாநில செயற்குழுவிற்கு செயலர்கள் தவறாது வரவேண்டுகிறேன். மாதாந்திர கிளைப்பொதுக்குழு கூட்டம் இம்மாதம் நடத்தாத கிளைகள் இதற்காக மாதாந்திர கூட்டத்தை நடத்தி தீர்மானத்துடன் வரவும். அமைப்பு விதிகளில் கிளைக்கு செயற்குழு கிடையாது. அவ்வாறு மேற்கொள்ளப்பட்டால் ஏற்க இயலாது என்பதையும் தெரிவிக்க விரும்புகிறேன்.

**மாநில செயற்குழுக் கூட்டம் அழைப்பு**

இடம் : அருண் ஹோட்டல் மினி ஹால், திருச்சி.

நாள் : 25.01.2020 காலை 9.00 மணிக்கு நடைபெற உள்ளதால் மாநில செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்துகொண்டு கூட்டத்தை சிறப்பிக்கவும்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுடன்,

**(இ.பி. பெருமாள்)**

பொதுச்செயலாளர்

**நடந்தவை என்ன என்பது பற்றி**

திருச்சி அருண் ஹோட்டலில் 16.09.2019 அன்று ஆட்சிக்குழுக் கூட்டம் நடைபெற்றது. மதுரைக்கிளை அனுப்பிய தீர்மானங்களில் ஒன்று நிராகரிக்கப்பட்டது. மற்றொன்று ஏற்றுக்கொள்ளப்பட்டு 17.09.2019 அன்று நடைபெற உள்ள மாநில செயற்குழுவிற்கு கொண்டு செல்வதெனத் தீர்மானிக்கப்பட்டது. அத்தீர்மானம் பின்வருமாறு: வருகின்ற தேர்தலில் மாநிலப் பொறுப்பாளர்களாக போட்டியிடுபவர்கள் கட்டிட நிதி உட்பட 2019-20 வரை உறுப்பினர் கட்டணம் மற்றும் பிற நிதிகளை நிலுவையின்றி முழுமையாக செலுத்தியிருக்க வேண்டும். எத்தகைய நிலுவையும் இல்லாதவர்களே தேர்தலில் போட்டியிடத் தகுதியுள்ளவர்கள் ஆவர் என்பதாகும். இதனை 17.09.2019 அன்று திருச்சி அருண் ஹோட்டல் மினி ஹாலில் நடைபெற்ற மாநில செயற்குழுவில் ஆட்சிக்குழு தீர்மானத்தை பொதுச்செயலாளர் படித்தார். ஒவ்வொரு கிளையும் தனித்தனியாகத் தங்களது கருத்தினை தெரிவிக்கும்படி கூறப்பட்டு கருத்தினை கிளைகள் தெரிவித்தன. மூன்று கிளைகள் மட்டும் தங்களது மறுப்பை தெரிவித்தன. தற்போது தீர்மானம் போட்டு நீதிமன்றம் சென்றுள்ள சென்னை மற்றும் மதுரை, சேலம் கிளைகள் ஒப்புதல் தந்தன.

பின்னர் தேர்தலுக்கான கிளைப் பொதுக்குழு உறுப்பினர் எண்ணிக்கை பற்றி விவாதிக்கப்பட்டு அமைப்பு விதிகளின்படி கடந்த மூன்று ஆண்டுகளில் கட்டிய உறுப்பினர் கட்டணத்தில் குறைவாக எவ்வாண்டு உள்ளதோ அதனைக் கொண்டு பொதுக்குழு உறுப்பினர் நிர்ணயிக்கலாம் என்று தீர்மானிக்கப்பட்டு ஒவ்வொரு கிளைக்குமான பொதுக்குழு உறுப்பினர் எண்ணிக்கை நிர்ணயிக்கப்பட்டு ஏற்கப்பட்டது. மூன்று கிளைகளில் பழைய எண்ணிக்கை குறைந்தது. சென்னை 10லிருந்து 9–ஆகக் குறைந்தது. இதற்குமேல் உறுப்பினர் கட்டணம் பெற்று எண்ணிக்கையை அதிகரிக்கக்கூடாது எனவும் செயற்குழுவின் முடிவானது. பின்னர் மாநாட்டிற்கான தீர்மானங்கள் படிக்கப்பட்டு ஏற்கப்பட்டது. உடனடியாக 18.09.2019 அன்றே செயற்குழு முடிவுகள் தஞ்சாவூர் மாநாட்டிற்கான தயாரிப்புகள் பற்றிய சுற்றறிக்கை அனுப்பப்பட்டது. அதனில் வேட்பாளர் செலுத்த வேண்டியிருக்க வேண்டிய கட்டணங்கள் பற்றியும் கூறப்பட்டது. அடுத்த சுற்றறிக்கை 10/19, 09.10.2019–ம் நாளிட்டது அனுப்பப்பட்டது. கிளை அளவில் உறுப்பினர்கட்கு மாதாந்திர கூட்டங்களின்போது தகவல் சென்று சேரவேண்டும் என்பதற்காக அனுப்பப்பட்டது. அதனில் ஒவ்வொரு கிளையும் கிளைப் பொறுப்பாளர்கள் மற்றும் மாநில பொதுக்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்க வேண்டிய எண்ணிக்கையும் பட்டியலிட்டு அனுப்பப்பட்டது. இவற்றையெல்லாம் TANRECTA Speaks மாத இதழ்களிலும் இடம்பெற்றுள்ளன.

28.09.2019 அன்று தஞ்சாவூர் காவேரி திருமண மண்டபத்தில் நடைபெற்ற மாநிலப் பொதுக்குழுவிலும் வேட்பாளராகப் போட்டியிடுபவர் செலுத்த வேண்டிய கட்டணங்கள் பற்றியும் கூறப்பட்டு தீர்மானம் நிறைவேறியது. மாநிலப் பொறுப்பாளர்களை தேர்ந்தெடுக்க மாநில செயற்குழுவால் நியமிக்கப்பட்ட தேர்தல் குழு கூடியபோது மாநில செயற்குழு மற்றும் பொதுக்குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வேட்பாளருக்கான தகுதி பற்றிய தீர்மானத்தை வலியுறுத்தினேன். ஏற்றுக்கொள்ளப்பட்டு தேர்தல் குழு தனது பணியினைத் தொடங்கி நடத்தியது. வேட்பாளருக்கான தகுதியாக நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் செலுத்தியது பற்றி தேர்தல் குழு ஒவ்வொரு வேட்பாளரையும் ஆராய்ந்தபோது சிலர் கிளையில் பணம் செலுத்தியதற்கான பற்று சீட்டு அனுப்பியிருந்தனர். சிலரது பற்றுச்சீட்டு இல்லாததால் மாநிலப் பொருளாளரிடம் உள்ள பணம் செலுத்திய பட்டியலை பரிசீலித்தது. கிளையில் பணம் செலுத்திய பற்று சீட்டு அனுப்பாமாலும் மாநிலத்திற்கு பணம் செலுத்திய பட்டியலில் பெயர் இல்லாதவர்கள் வேட்பு மனு நிராகரிக்கப்பட்டது. வேட்பு மனு நிராகரித்த பின் நீதிமன்றம் சென்றவர் தேர்தலை நிறுத்தக்கோரியபோது நீதிமன்றம் தேர்தலை நிறுத்தாமல் விசாரணையை தொடங்கியது.

**(இ.பி. பெருமாள்)**
பொதுச்செயலாளர்



Generated by Foxit PDF Creator © Foxit Software
http://www.foxitsoftware.com For evaluation only.



**தமிழ்நாடு ஓய்வு பெற்ற கல்லூரி ஆசிரியர் கழகம்**

பதிவு எண். 236/2000

**மாநிலப் பொறுப்பாளர்கள் தேர்தல் 2020 - 2022 மூன்று ஆண்டுகள்**

மாநில தேர்தல் குழு சுற்றறிக்கை எண்.4 நாள் : 21.12.2019

அன்புடையீர்.

வணக்கம் தமிழ்நாடு ஓய்வு பெற்ற கல்லூரி ஆசிரியர் கழகத்தின் மாநில நிர்வாகிகளை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தலை 28.12.2019 அன்று நடத்திட திட்டமிட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. தேர்தலில் போட்டியிட வேட்பு மனு தாக்கல் செய்தவர்களில் ஒரு சிலரது வேட்பு மனுக்கள் தகுந்த காரணங்களால் தேர்தல் குழுவால் நிராகரிக்கப்பட்டது.

அவ்வாறு வேட்புமனு நிராகரிக்கப்பட்டவர்களில் ஒருவர் TANRECTAவின் தேர்தலுக்கு தடை விதிக்க கோரி மதுரை உயர்நீதிமன்ற கிளையில் வழக்கு தாக்கல் செய்துள்ளார். வழக்கு விசாரணைக்கு வந்த பொழுது (19.12.2019) தேர்தலுக்கு தடை ஆணை (Stay) வழங்காமல் தேர்தல் நடத்துவது தொடர்பாக சில ஆலோசனைகளை தெரிவித்து அது தொடர்பாக TANRECTAவின் அபிப்பிராயத்தை தெரிவிக்குமாறு நீதிமன்றம் பணித்துள்ளது. அத்துடன் வழக்கு விசாரணை பிப்ரவரி முதல் வாரத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. நீதிமன்றம் தெரிவித்த கருத்துக்கள்/ ஆலோசனைகள் தொடர்பாக செயற்குழுவை கூட்டி விவாதித்துதான் முடிவெடுக்க இயலும்.

விரைவில் செயற்குழு கூடி, மாநில தேர்தல் பற்றி விவாதித்து முடிவெடுத்து, அறிவிப்பு வெளியிடும். எனவே 28.12.2019 அன்று நடைபெறவிருந்த தேர்தல் நடைபெறாது என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம். தேர்தல் குழுவுக்கு ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**அனைவருக்கும் இனிய கிறிஸ்துமஸ் புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துக்கள்**

**தேர்தல்குழு**

பேரா.S.கனகசுந்தரம், பேரா.T.G.நாகராஜன், பேரா.V.ஹரிராஜன்

## கிளைச் செய்திகள்

### PUDUKKOTTAI UNIT

The unit general body was convened on 17/11.19 with Prof. M. Srikumar in the chair. Prof. S. Viswanathan welcomed the gathering. The resolutions adopted are

1) Professors P. Subramanian and S. Subramanian celebrate their birthdays this month.The unit wishes them a long, happy, healthy and peaceful life.
2) The mother of Prof.Vija Grace&(late)Prof.Shyamala Sundarabai and mother in law of Prof. M. Santhoshbabu & Prof.E.J John Jeyakumar, Mrs. Thelma leelavathi Thomas passed away.The general body offered its condolences to the bereaved family.
3) The following members were elected unanimously as unit office bearers.

President: Prof. M. Srikumar, Vice President: Prof. V. Vembaiyan, Secretary: Prof. G. Manivannan, Joint secretary : Prof. S. Palaniappan (Botany), Treasurer: Prof. S. Viswanathan. Prof. S. Viswanathan proposed vote of thanks.

**Manivannan. G.**
Secretary, Pudukkottai Unit.

### MAYILADUTHURAI

The monthly meeting of TANRECTA was conducted on Sunday the 8th December 2019 at 11am in Arivalayam Matriculation Higher Secondary School Mayiladuthurai. Prof.R.Gnanasekaran welcomed the gathering. Prof.Gnanaskandan gave lunch to all the participants to celebrate his 70th birthday.

Homage was paid to the 26th Gurumaha Sannidhanam of Dharumapuram Mutt.Sri la Sri Shanmuga Desika Gnanasambanda Paramacharya Swmigal who atrained eternal bliss on 4.12.2019. Prof.M.Tamilarasan proposed the vote of thanks.

**S.Murugesan,**
Vice President, Mayiladuthurai.

### PARAMATHI VELUR UNIT

The unit general body meeting was held on 14.12.2019 at South Indian Residency Hotel at 6.30 PM under the chairmanship of Dr. R. Subramaniam the President of the Unit. After the welcome address 2 minutes silence was observed by the members present for the demise of our unit member and Senior Professor of the Department of English at Kandaswami Kandar's College, P. Velur Prof. R. Chinnaswamy at his residence at Coimbatore. It is really a great loss to his family as well as to



Generated by Foxit PDF Creator © Foxit Software
http://www.foxitsoftware.com For evaluation only.



the academic community. Members prayed for His soul rest in peace. The State Vice President Dr. M Rajagopal who is a contestant for the current State Election for the post of State Treasurer visited and appealed to the members present to support him in the forthcoming election recalling his services as the Vice President of TANRECTA during the previous regime.

The president explained in detail about the actions taken for the members for the revision of pension and arrears in the past and future course of action to be taken for the rest of the members whose pension revision is pending in the JD's office. The secretary requested the members to pay the arrears of subscriptions, building fund etc. as soon as possible. He also requested the office bearers to co-operate by poling their valuable votes in the forthcoming election for the state office bearers.

All the members congratulated Prof. M. Chandrakesan for his birth day. The President Dr. R. Subramaniam hosted the dinner for the members present today and was thanked by all the members. The members were informed that the next meeting will be held on 12th January 2020 at the same venue and at the same time.

DR. T.P.J. BHARATHI,
Secretary, Paramathi Vellur.

### குடியாத்தம் கிளை

குடியேற்றம் கிளையின் பொதுக்குழு கூட்டம் 01.12.2019 அன்று அரசினர் திருமகள் ஆலைக்கல்லூரியில் அறை எண்:8-இல்காலை 11.00 மணிக்கு பேரா முனைவர் எஸ்.பாபு கிளைத்தலைவர் தலைமையில் நடைபெற்றது. கிளைச்செயலர் பேரா முனைவர் கு நடராசன் கூட்டத்திற்கு வந்திருந்த அனைவரையும் வரவேற்று கோரிக்கைளின் இன்றைய நிலை பற்றி விவரித்தார். கிளை பொருளர் பேரா முனைவர் எஸ். சக்கரவர்த்தி கிளையின் வரவு செலவு கணக்குகளை கூறி கையிருப்பை விளக்கினார். பிறகு அவரே நன்றி கூற பொதுக்குழு கூட்டம் இனிதே நிறைவுபெற்றது. தொடர்ந்து பெய்து வரும் அடா தழையிலும் உறுப்பினர்கள் கிளையின் பொதுக்குழு கூட்டத்திற்கு வருகை தந்து சிறப்பித்தது பொறுப்பாளர்களுக்கு மன மகிழ்ச்சியை தந்தது.

இம்மாதம் 7ஆம் தேதி முதல் 9ஆம் தேதி வரை ஒடிசா மாநிலத்தில் புவனேஸ்வர் நகரில் நடைபெறவுள்ள AIFRUCTO மாநாட்டில் பின்வரும் உறுப்பினர்கள் பங்கேற்க உள்ளதற்கு பொதுக்குழு ஒப்புதல் வழங்கப்பட்டது. 1. பேரா.முனைவர் எஸ் பாபு – கிளைத் தலைவர், 2. பேரா.முனைவர் கு.நடராசன் – கிளைச்செயலர், 3. பேரா.முனைவர் எஸ் சக்கரவர்த்தி – கிளைப் பொருளர், 4. பேரா.எம் சோமு – கிளை உறுப்பினர். **அடுத்த மாத பொதுக்குழு கூட்டம் 05.01.2020 அன்று இதே கல்லூரி வளாகத்தில் காலை 11.00 மணிக்கு தொடங்கும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.**

**கு.நடராசன்**

செயலர், குடியாத்தம் கிளை.

**உடுமலைப்பேட்டை கிளை**

(14.12.2019) சனிக்கிழமையன்று காலை 11.00 மணிக்கு கிளைப் பொதுகுழுக் கூட்டம் நடைபெற்றது. கிளைத்தலைவர் பேரா.M.R. வேலுசாமி பொதுக்குழு கூட்டத்திற்கு தலைமையேற்று அனைவரையும் வரவேற்று சிறப்புரையாற்றினார். கிளைத்தலைவர் பொருளாதாரதுறையை சார்ந்தவரதலால், இந்தியாவின் இன்றைய பொருளாதார நிலைமையைப் பற்றி விரிவாக விவாதம் நடைபெற்றது. வங்கிகளில் Fixed Deposit - க்கு வட்டிவிகிதம் மிகவும் குறைந்துள்ளது பற்றியும் விவாதம் நடைபெற்றது.

கிளைச்செயலர் பேரா. M. வெள்ளிங்கிரி நிலுவையுள்ள கோரிக்கைகள் பற்றி விவரித்தார். மாநில ஆட்சிக்குழு சென்ற மாதம் கோரிக்கைகள் பற்றி கல்லூரி கல்வி இயக்குநரிடம் எடுத்து கூறியதை தெரிவித்தார். 2006க்கு பின்பும், 2016க்கு முன்பும் பணியில் ஓய்வுபெற்றவர்களுக்கு Concordance Table பற்றி AIFRUCTO பொதுச்செயலர் பேரா. B.பார்த்தசாரதி அவர்கள் அவ்வப்போது குறுஞ்செய்திகள் அனுப்பியதை விவரித்தார். டிசம்பர் 28ம்தேதி மாநில தேர்தல் திருச்சியில் நடைபெறுவதையொட்டி, கிளைப் பொறுப்பாளர்கள் தவறாது வந்து ஒட்டுளிக்கும்படி கேட்டுக் கொண்டார்.

**பிறந்தநாள் வாழ்த்து :** (14.12.2019) டிசம்பர் மாதம் பிறந்தநாள் கண்ட பேரா.முனைவர் ரேணுகாதேவி அவர்களுக்கு கிளை துணைச்செயலர் பேரா. S.லட்சுமியம்மாள் வாழ்த்துரைத்துப் பாராட்டினார். பேரா.முனைவர் அதற்கு நன்றி கூறி இனிப்பு, காரம், தேநீர் விருந்து உறுப்பினர்களுக்கு அளித்தார். பேரா.M. வெள்ளிங்கிரி, பேரா. ஷேக்முஸ்தபா ஆகியோர் ஏற்கனவே AIFRUCTO ஆயுள் உறுப்பினராக உள்ளனர். தற்பொழுது புதிதாக AIFRUCTOவிற்கு ஆயுள் உறுப்பினராக 37பேர் சேர்ந்துள்ளார்கள். அவர்களுடைய பெயரை கிளை துணைச்செயலர் கூறினார்.

மேலும் கிறிஸ்தவ உறுப்பினர்களுக்கு கிறிஸ்துமஸ் வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டு, அனைத்து உறுப்பினர்களுக்கும் 2020 புத்தாண்டு வாழ்த்துக்கள் கிளையின் சார்பாக பேரா. S.லட்சுமியம்மாள் வாழ்த்துக்களை தெரிவித்தார். கிளைப் பொதுக்குழு கூட்டத்திற்கு வருகைபுரிந்த அனைத்து உறுப்பினர்களுக்கும் நன்றி தெரிவித்து, கூட்டம் நிறைவுற்றது.

பேரா. **எம். வெள்ளிங்கிரி**

கிளைச்செயலர், உடுமலைப்பேட்டை.

**பொள்ளாச்சி கிளை**

கிளையின் பொதுக்குழு கூட்டம் 14.12.19 அன்று மாலை 4 மணிக்கு N.G.M. கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. வருகைபுரிந்த உறுப்பினர்கள் அனைவரையும் வரவேற்று கிளைச் செயலாளர் முனைவர் மு. இராமச்சந்திரன் அவர்கள் கூட்ட நிகழ்ச்சிகளைத் துவக்கி வைத்தார். கிளைத் தலைவர் முனைவர் P. சுந்தரம் அவர்கள் கிளையின் செயல்பாடுகளை விளக்கிக் கூறினார்கள். இம்மாதம் பிறந்தநாள் காணும் பேரா. V. பாலசுப்ரமணியம் அவர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்தனர். ஓய்வுபெற்ற பேராசிரியர்களுக்கு உயர் மதிப்பூதியம் Rs. 14,940/- பெறுவதற்கு மதுரை கிளைச் செயலாளர் திரு.இராமமூர்த்தி அவர்களுடன் இணைந்து வழக்குத் தொடுப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது. இறுதியாக கிளைப் பொருளாளர் பேரா.பாலகங்காதரன் அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவடைந்தது. **அடுத்த கூட்டம் 11.01.2020 அன்று சனிக்கிழமை மாலை N.G.M. கல்லூரி வளாகத்தில் நடைபெறும்.**

முனைவர் **மு. இராமச்சந்திரன்**

செயலாளர், பொள்ளாச்சி கிளை.



Generated by Foxit PDF Creator © Foxit Software
http://www.foxitsoftware.com For evaluation only.



**தஞ்சாவூர் கிளை**

எமது கிளையின் பொதுக்குழுக் கூட்டம் 14.12.2019 சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு தஞ்சாவூர் மன்னர் சரபோஜி அரசுக் கல்லூரியில் நடைபெற்றது. கூட்டத்திற்கு கிளைத் தலைவர் பேரா. ஆ. இராமகிருஷ்ணன் தலைமை தாங்கினார். கிளைச் செயலாளர் பேரா. வே. இராமசாமி அனைவரையும் வரவேற்றுப் பேசினார். கூட்டத்தின் துவகத்தில் டிசம்பர் மாதம் பிறந்த நாள் காணும் பேராசிரியர்கள் N. வெங்கடேசன், G. தேவதாசன், வே. சேதுராமன், வீ. கிருஷ்ணன், சீ.இராஜன், கே.சுப்பிரமணியன், S.ரமேஷ், வீ.இளவழகன், G.சந்திரமோகன், N.உதயகுமாரி, தி.இந்திரா, எம்.கமலா ஆகியோருக்கு கிளையின் சார்பாக இனிய பிறந்தநாள் வாழ்த்து தெரிவிக்கப்பட்டது. அவர்கள் அனைவரும் நல்ல உடல்நலம், மன அமைதி ஆகியவற்றுடன் நீண்ட நாள் சிறப்பாக வாழ வாழ்த்தப்பட்டனர். கூட்டத்திற்கு வந்திருந்த பேரா. என். வெங்கடேசன் அவர்களுக்கு மாநிலப் பொருளாளர் பேரா. எம். பாலசுப்ரமணியன் கைத்தறித்துண்டு போத்தி வாழ்த்தினார்.

கிளைச் செயலாளர் முனைவர் வே. இராமசாமி நடைபெற்றயுள்ள நமது அமைப்பின் மாநிலத் தேர்தல் மற்றும் வரும் புத்தாண்டில் (2020) ஆண்டு விழா நடத்துவது ஆகியனபற்றி உறுப்பினர்களிடம் விளக்கினார். வரும் 11.01.2020 இரண்டாவது சனிக்கிழமை ஆண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடுவது என முடிவு செய்யப்பட்டது. கிளையின் சார்பாக உறுப்பினர்களுக்கு 2020 ஆண்டிற்கான புதிய மாதாந்திர நாட்காட்டி வழங்கப்பட்டது. தொடர் மழையையும் பொருட்படுத்தாமல் கிட்டத்தட்ட 25 உறுப்பினர்கள் கூட்டத்திற்கு வருகை தந்தது மகிழ்ச்சியாய் இருந்தது.

இறுதியில் கிளைப் பொருளாளர் பேரா. P.கிருஷ்ணமூர்த்தி நன்றி கூற கூட்டம் இனிதே முடிவு பெற்றது. **அடுத்த பொதுக்குழுகூட்டம் ஆண்டு விழாவாக 11.01.2020 சனிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும். இடம் மற்றும் பிற விபரங்கள் உறுப்பினர்களுக்கு கடிதம் மூலம் தெரிவிக்கப்படும்.**

முனைவர் **வே. இராமசாமி**

செயலாளர், தஞ்சாவூர் கிளை.

Generated by Foxit PDF Creator © Foxit Software
http://www.foxitsoftware.com For evaluation only.



## சென்னை கிளை

சென்னை கிளையின் பொதுக்குழுக் கூட்டம் கிளைத் தலைவர் முனைவர் வை. சுவாமிநாதன் தலைமையில் 14.12.2019 அன்று பிற்பகல் காயிதே மில்லத் அரசு மகளிர் கல்லூரி அரங்கில் நடைபெற்றது. மறைந்த இந்தி பேராசிரியர் முனைவர் கே. ஜெயலட்சுமி அவர்களுக்கு மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது.

அடுத்து தனது தலைமையுரையில் அன்று காலை நடைபெற்ற விழாவின் வெற்றிக்காக உறுப்பினர்களுக்கு நன்றியும் பாராட்டும் தெரிவித்தார். ஓய்வூதிய திருத்தம் பெருவாரியாக முடிவடைந்துவிட்டபோதும், எஞ்சியுள்ளோரைக் குறிப்பிட்டு அவர்களுக்காகவும், 2018-ல் ஓய்வு பெற்று ஒன்றரை ஆண்டுகள் கடந்த பின்னும் ஓய்வூதிய பயன்களை பெறாமலுள்ள JBAS கல்லூரியின் இரு பேராசிரியர்களுக்காகவும் எடுக்கப்பட்டுள்ள முயற்சிகளை விளக்கினார். மாநிலத் தேர்தலில் நம் கிளையிலிருந்து அனைத்து நிதிகளையும் செலுத்தி மூன்று பேர் வேட்பு மனுக்கள் அனுப்பியதையும் அவற்றில் ஒரு மனு மட்டும் ஏற்கப்பட்டு இரு மனுக்கள் நிராகரிக்கப்பட்டதையும் தெரிவித்தார். அதை ஆட்சேபித்து அனுப்பிய முறையீடுகளுக்கு தேர்தல் குழு, 'அமைப்பு விதிகளில் கூறப்பட்டுள்ள தகுதிகள் மாற்றப்பட்டுவிட்டது', 'உங்கள் கிளைச் செயலர் Mind Apply செய்து கையெழுத்திடவில்லை', 'மாநிலப் பொருளரிடம் பட்டியல் அனுப்பி நிதி செலுத்திய விவரங்கள் பெறப்பட்டன' என வரம்பு மீறி பதில் கூறியுள்ளதையும் குறிப்பிட்டார். கிளைப் பொருளாளரின் வேட்பு மனு 'தொடர்ந்து மூன்றாண்டுகள் உறுப்பினர் கட்டணம் செலுத்தாததால் நிராகரிக்கப்பட்டது' என அறிவித்த தேர்தல் குழு அமைப்பாளரிடம் 'அவ்வாறு எந்த விதி எண்ணில் சொல்லப்பட்டுள்ளது' என அவர் கேட்டதற்கும் முறையான பதில் சொல்லாமல் 'Prerogative Right' என்று தெரிவித்துள்ளதையும் கூறினார். கிளைச் செயலர் முனைவர் R. லாரன்ஸ் தனது அறிக்கையில் 1986-88 பிரச்சினைக்கான தீர்வின் அவசியம், அது எவ்வாறு 22 ஆண்டுகள் பணி முடித்தோர்க்கு பேராசிரியர் ஊதிய விகிதம் வழங்கப்படுகையில் தாக்கமேற்படுத்தும் என்பது, மத்திய அரசு வழங்கியுள்ள First Formulation அடிப்படையில் ஊதியத்திருத்த பயன், மேலும் Concordance Table பற்றிய சாத்தியக் கூறுகள் மற்றும் பயன்களைப்பற்றி விளக்கினார்.

தேர்தல் தொடர்பான செய்திகள் குறித்து பல பொதுக்குழு உறுப்பினர்கள் அதிர்ச்சியும் கவலையும் கொண்டனர். அவர்கள் தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன: 1. கிளைத் தலைவர் பேரா. சுவாமிநாதன், பொருளாளர் பேரா. உஷா ரகோத்தம் ஆகியோரின் வேட்பு மனுக்களை நிராகரித்ததை பொதுக்குழு வன்மையாக கண்டிக்கிறது; 2. அமைப்பு விதிகளுக்குப் புறம்பாகவும் ஜன நாயகமற்ற முறையிலும் நடைபெறும் தேர்தல் நடைமுறைகளைக் கைவிட்டுஇ புதிய தேர்தல் குழுவை நியமித்து நியாயமாகத் தேர்தல் நடத்திட வேண்டுகிறது; 3. தேர்தல் குழு அமைப்பாளரின் கடிதத்தில் கிளைச் செயலர் Mind Apply செய்து கையெழுத்திடவில்லை என வரம்புமீறி குறிப்பிட்டுள்ளதை கண்டிக்கிறது; 4. வேட்பு மனுக்கள் நிராகரிப்புக்கு எதிராக அவர்களை கிளைச் செலவில் நீதிமன்றம் செல்ல வேண்டுகிறது.





சனவரி மாதம் வரும் தனது பிறந்த நாளையொட்டி கிளைக்கு தேநீர் வழங்கிட நன்கொடை ரூ.4000 வழங்கிய பேரா. N. விஸ்வநாதன் மற்றும் கூட்டத்தில் கலந்து கொண்டோருக்கு இணைச் செயலர் முனைவர் CR ரவி நன்றி தெரிவிக்க, கூட்டம் நிறைவுற்றது. முன்னதாக, ஓய்வூதியர் தினத்தையொட்டி காலை 10.30 மணிக்கு தொடங்கி இவ்வாண்டில் 80 வயது நிறைவுற்ற 12 பேராசிரியர்கள் / முனைவர்கள் R. சதாசிவம், AK. ஜானகி, S. கமலா, M. முத்துசாமி, S. நடராசன், A. சிங்கராயர், C. சோமு, S. கற்பக விநாயகம், N. சுவாமிநாதன், தங்கம் சேஷன், C. பிருந்தாவன் மோசஸ், R. கருணாகரன் ஆகியோருக்கு பாராட்டுவிழா நடைபெற்றது. 150 பேர் கலந்துகொண்டனர். 90 வயதை எட்டவுள்ள பேரா. K.P. கந்தசாமி, பேரா. சேஷன் மற்றும் கிளை உறுப்பினர்கள் வாழ்த்திப் பேசினர். கல்லூரி முதல்வர் சார்பில் மூத்த பேராசிரியர் மகரசி உரைக்குப் பின், சிறப்பு விருந்தினர், ஆசிரியராகவும் ஆட்சிப் பணியில் சாதனையாளராகவும் திகழ்ந்த மதுரை காமராசர் பல்கலைக் கழக மேநாள் துணை வேந்தர் பேராசிரியர் க. ஆளுடையபிள்ளை இ.ஆ.ப. (ஓய்வு) அவர்கள் அனைவருக்கும் சால்வை அணிவித்து, நினைவுப் பரிசும் பாராட்டு சான்றிதழும் அளித்து வாழ்த்துரை வழங்கினார். துணைத் தலைவர் முனைவர் இல. வெங்கடசாமி நன்றியுரையாற்றினார்.

வர்தா புயலில் வீழ்ந்த மரங்களின் நினைவாக கல்லூரி வளாகத்தில் பேரா. பாரதி சேதுமாதவன் ஏற்பாட்டில் மரக் கன்றுகள் நடப்பட்டன. நிறைவாக, வாழையிலை விருந்துடன் விழா இனிதே நடந்தேறியது. **அடுத்த மாத கூட்டம் 11.1.2020, இரண்டாவது சனிக்கிழமையன்று நடைபெறும்.**

Dr. **R. Lawrence ,**
Secretary, Chennai Unit.

## தூத்துக்குடி கிளை

எமது கிளையின் டிசம்பர் மாதக் கூட்டம் 10.12.2019 செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணி அளவில் தூத்துக்குடி பேரா. S.C. எடிசன் அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு இணைச் செயலர் பேரா. P. அலெக்ஸ்சாண்டர் கனகராஜ் தலைமை தாங்கி அனைவரையும் வரவேற்றுப் பேசினார். செயலர் பேரா.ம.கமல்ராஜ் TANRECTA மாநில நிர்வாக குழு உறுப்பினர் தேர்தல் நடைபெறுகின்ற பொழுது நமது கிளை நிர்வாக குழு உறுப்பினர் அனைவரும் தவறாது வாக்களிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

பேராசிரியர் ஆ.விசுவாசம், தி.ப. வைத்திய நாதன் மற்றும் S.S. கந்தசாமி ஆகியோர் திருக்குறளில் வாழ்வியல் என்ற தலைப்பில் விவாதித்து அரிய கருத்துக்களை பகிர்ந்து கொண்டனர். அனைவருக்கும் முனைவர் கேப்டன் P. பிரபாகரன் சுவையான சிற்றுண்டி மற்றும் தேநீர் வழங்கினார். அவரை அனைவரும் பாராட்டி நன்றி தெரிவித்தனர்.பேரா. S. இம்மேனுவேல் அனைவருக்கும் கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு வாழ்த்துகளை தெரிவித்து நன்றி கூறினார்.

**14 ஜனவரி 2020 இரண்டாம் செவ்வாய்க்கிழமை போகிப் பண்டிகை ஆதலால் அம்மாத கிளை கூட்டம் ஜனவரி 11 இரண்டாம் சனிக்கிழமை மாலை 4.30 அளவில் தூத்துக்குடியில் பேரா.S.C. எடிசன் அவர்கள்**

**இல்லத்தில் நடைபெறும்.** 2018-2019ஆம், மற்றும் 2019-2020 ஆம் ஆண்டிற்கான உறுப்பினர் கட்டணம் முறையே ரூ.400/- (நானூறு) செலுத்தாதவர்கள் கிளையின் வங்கிக் கணக்கில் செலுத்த கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**Account No: 505561496; Indian Bank, Melur Branch, Tuticorin. IFSC Code : IDIB000M083 A/c Name. Tamilnadu Retired College Teacher's Association, Thuthukudi.**

பேரா.**ம. கமல்ராஜ்**
செயலர், தூத்துக்குடி கிளை.
செல்: 9442306905

## சிதம்பரம் கிளை

டிசம்பர் 18 ஆம் நாள் நடந்த கூட்டத்திற்கு வந்திருந்தோரை செயலாளர் வணங்கி வரவேற்றார். இம்மாதம் பிறந்தநாள் கண்ட உறுப்பினர்கள் பேராசிரியர்கள், T. முத்துக்குமரன், அழகிரிசாமி, முனைவர்கள் ஜே.விமலவல்லி, ஆர். சிவஞானம் ஆகியோர் வளமுடன் நலமுடன் பல்லாண்டுகள் வாழ இறைவனை இறைஞ்சி வாழ்த்தப்படனர். அமரர் ஜனாப் அமீர் அலி அவர்களின் மனைவியார் குடும்ப ஓய்வூதியம் பெற ஏதுவாக விண்ணப்பம் தயாரித்து தகுந்த சான்றுகளுடன் கருவூலத்தில் தரப்பட்டது. பேராசிரியர் D. சுவாமிநாதன் அவர்களின் மகள் வழிப்பெயரன் Dr.சச்சின்ராஜுக்கு நடைபெற உள்ள திருமணத்தை முன்னிட்டு அவருக்கு வாழ்த்துக்கள் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.
நவம்பர் மாதத்தில் இருந்து திருத்திய வருமானவரிப்பிடித்தம் விவரம் உறுப்பினர்களுக்கு தெரிவிக்கப்பட்டது. பேராசிரியர் மு சிதம்பரராசன், முனைவர் சிவஞானம் இருவரும் இணைந்து வடை பாயாசத்துடன் அருமையான பிறந்தநாள் விருந்து அளித்தனர். அவர்களுக்கு நன்றி பாராட்டப்பட்டது. **அடுத்த கூட்டம் 2020 ஜனவரி 11 ஆம் நாள் நடைபெறும்.**

**க.இளங்கோவன்**
செயலாளர், சிதம்பரம் கிளை.

## சேலம் கிளை

சேலம் கிளையின் பொதுக்குழு கூட்டம் 17-12-2019 அன்று சேலம் - 7 அரசு கலைக் கல்லூரி வளாகத்தில் கிளையின் தலைவர் பேரா. பெ. மாது அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் புதிதாக மாநில ஆட்சிக்குழுவிற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பேரா. பெ. மாது அவர்களுக்கு பாராட்டும் வாழ்த்தும் தெரிவிக்கப்பட்டது. மாநில ஆட்சிக்குழு தேர்தலில் பொதுச் செயலாளர் பதவிக்கு போட்டியிடும் பேரா.E.P. பெருமாள் அவர்களும், பொருளருக்கு போட்டியிடும் பேரா. இராஜகோபால் அவர்களும் நேரில் வந்து வாக்குகளை சேகரித்தனர். பின்னர் பொதுக்குழு கூட்டம் முறையாக நடைபெற்றது. இக்கூட்டத்தில் சேலம் சாரதா கல்லூரியின் ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் 7-வது ஊதியக்குழுவில் ஓய்வூதியப் பயன்கள் பெற்ற பேராசிரியைகள் இனிப்பு, காரம் மற்றும் டீ வழங்கி தங்களுடைய நன்றியினை தெரிவித்துக்கொண்டார்கள். இத்துடன் பொறுப்பாளர்களுக்கு



Generated by Foxit PDF Creator © Foxit Software
http://www.foxitsoftware.com For evaluation only.



விவேகானந்தர் புத்தகம் ஒன்றினை வழங்கியும் கௌரவித்தார்கள். பிறகு இணைச்செயலாளர் பேரா. ஸ்ரீரங்கன் நன்றி கூற கூட்டம் இனிதே முடிவுற்றது.

இச்சூழலில் மாநில பொருப்பாளர்கள் தேர்ந்தெடுக்கும் குழுவிடமிருந்து தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக கடிதம் வந்துள்ளது. அதன் சாரம்சம் தேர்தலில் போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்தவர்களில் ஒரு சிலரது வேட்பு மனுக்கள் தகுந்த காரணங்களால் தேர்தல் குழுவால் நிராகரிக்கப்பட்டது. அவ்வாறு வேட்புமனு நிராகரிக்கப்பட்டவர்களில் ஒருவர் TANRECTA-வின் தேர்தலுக்கு தடை விதிக்க கோரி மதுரை உயர் நீதிமன்ற கிளையில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

வழக்கு விசாரணைக்கு வந்த பொழுது (19-12-2019) தேர்தலுக்கு தடை ஆணை (STAY) வழங்காமல் தேர்தல் நடத்துவது தொடர்பாக சில ஆலோசனைகளை தெரிவித்து அது தொடர்பாக TANRECTA-வின் அபிப்பிராயத்தை தெரிவிக்குமாறு நீதிமன்றம் பணித்துள்ளது. அத்துடன் வழக்கு விசாரணை பிப்ரவரி முதல் வாரத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. நீ தி ம ன் ற ம் தெரிவித்த கருத்துக்கள் / ஆலோசனைகள் தொடர்பாக செயற்குழுவை கூட்டி விவாதித்துதான் முடிவெடுக்க இயலும். விரைவில் செயற்குழு கூடி மாநில தேர்தல் பற்றி விவாதித்து முடிவெடுத்து அறிவிப்பு வெளியிடும். எனவே 28-12-2019 அன்று நடைபெறவிருந்த தேர்தல் நடைபெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம் என்று கூறப்பட்டுள்ளது. இச்சூழலில் மாநில செயற்குழு கூட்டம் விரைவில் நடைபெற உள்ளது. **இக்கிளையின் அடுத்த பொதுக்குழு கூட்டம் 21-01-2020 அன்று மாலை 4- மணிக்கு அரசு கலைக்கல்லூரியில் நடைபெறும்.** அனைவருக்கும் கிறிஸ்துமஸ் புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துக்களை ஆட்சிக்குழுவின் சார்பாக தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரா. **K.R. ரவிந்திரன்**
செயலாளர், சேலம் கிளை

## பொறையார் கிளை

தமிழ்நாடு ஓய்வுபெற்ற கல்லூரி ஆசிரியர்கள் கழக பொறையார் கிளையின் டிசம்பர் மாத கூட்டம் 14.12.2019 அன்று தரங்கை வட்ட ஓய்வுபெற்ற ஆசிரியர் சங்க கட்டிடத்தில் தலைவர் பேரா. அ. அருள்மரியநாதன் தலைமையில் நடைபெற்றது. வருகைதந்த உறுப்பினர்களை தலைவர் வரவேற்று பேசினார்கள். மேலும் இந்த மாதத்தில் பிறந்தநாள் காண்கிற பேரா. பிரேமாவதி ஜார்ஜ், முனைவர் அ. ராஜன், மற்றும் முனைவர் டி.புஷ்பராணி அத்துடன் இந்த மாதத்தில் தங்களின் திருமணநாளை கொண்டாடுகின்ற தம்பதிகள் திரு & திருமதி பேரா. நத்தேனியல் ஹர்பர்ட் திரு & திருமதி. பிராங்ரெத்தினகுமார், திரு & திருமதி. ஜான் அலெக்சாண்டர் மற்றும் திரு & திருமதி. Dr. தம்பையா பிரபுதாஸ் அனைவருக்கும் கிளை கழகத்தின் சார்பில் உறுப்பினர்களுடன் வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டது.

செயலர், மாநில பொறுப்பாளர்கள் தேர்தல் தொடர்பாக வந்திருந்த சுற்றறிக்கைளை வாசித்தார்கள். நமது கிளையில் இருந்து பொறுப்பாளர்கள் அனைவரும் தேர்தலில் கலந்துகொண்டு வாக்களிக்க முடிவு செய்யப்பட்டது. அத்துடன் மாநில பொறுப்பாளர்கள் பதவிகளுக்கு போட்டியிடும் வேட்பாளர்களுக்கு

Generated by Foxit PDF Creator © Foxit Software
http://www.foxitsoftware.com For evaluation only.



விதிக்கப்பட்ட தகுதிகளில் கட்டிடநிதி, வளர்ச்சி நிதி, அறக்கட்டளை நிதி AIFRUCTO சந்தா இவைகளையும் தவறாமல் செலுத்தவேண்டும் என்பது ஏற்புடையது அல்ல என்று அனைத்து உறுப்பினர்களும் கருத்து தெரிவித்தார்கள். **ஜனவரி 2020-ம் ஆண்டு கூட்டம் 11.01.2020 சனிக்கிழமை மாலை சரியாக 5 மணிக்கு நடைபெறும்.** முனைவர் நா. கண்ணப்பன் நன்றி கூற கூட்டம் நிறைவடைந்தது.

பேரா. **சு. சுகுமார்**
செயலர், பொறையார்கிளை.

**விழுப்புரம் கிளை**

விழுப்புரம் கிளையின் பொதுக்குழுக் கூட்டம் 15. 12. 2019 ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணிக்கு விழுப்புரம், வி. ஆர். பி. மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் கிளைத் தலைவர் பேரா. மு. வரதராசலு அவர்களது தலைமையில் நடைபெற்றது. வருகைபுரிந்த உறுப்பினர்களை கிளைப்பொருளாளர் பேரா. எஸ். வி. சுப்புராம் அவர்கள் வரவேற்று உரையாற்றினார். "திங்கள் ஒரு குறள்" என்ற வகையில் பேரா. முனைவர் பொன். நடராசன் அவர்கள் "வான் சிறப்பு" என்னும் அதிகாரத்தில் பின்வரும் குறளின் விளக்கத்தினை அளித்தார்:

**"விசும்பின் துளிவீழின் அல்லால் மற்றாங்கே**
**பசும்புல் தலைகாண்பு அரிது"** (குறள் 16)

கிளைத்தலைவர் தமது தலமையுரையில் வருமானவரிக் கணக்கீட்டுப் படிவங்கள் அனைத்து உறுப்பினர்களுக்கும் தற்போது வழங்கப்பட உள்ளதாகத் தெரிவித்தார். கிளைச்செயலர் பேரா.முனைவர் மு. சேகர் அவர்கள் தமது அறிக்கையில் கடந்த ஒரு மாதமாக நிகழ்ந்த இயக்க செயல்பாடுகளைப் பற்றி விவரித்தார். மாநிலத் தேர்தல் பற்றியும், தேர்தலில் இறுதி வேட்பாளர்கள் குறித்த தகவலையும் உறுப்பினர்களுக்குத் தெரிவித்தார். விழுப்புரம் கிளை உறுப்பினர்களிடையே தகவல் பரிமாற்றத்திற்காக **Whatsapp - group "TANRECTA - VPM"** என்ற தலைப்பில் உருவாக்க அனுமதி அளித்த பொதுக்குழுவிற்கு நன்றியையும் தெரிவித்தார். குழு உறுப்பினர்கள் இயக்கம் சார்ந்த செய்திகளை மட்டும் பதிவிடுமாறும், அரசியல், ஜாதி, மதம் சார்ந்த செய்திகளைப் பதிவிட வேண்டாம் என்றும் வலியுறுத்தினார். வருமானவரிக் கணக்கீட்டுப் படிவத்துடன் நவம்பர் மாதம் வரை பெற்ற ஓய்வூதியம் குறித்த விவரப் பட்டியல் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டது. பூர்த்தி செய்யப்பட்ட படிவம் ஜனவரி மாதக் கூட்டத்தின் போது வழங்கவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பேரா. இர நிசார் அவர்கள், அறுபது வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கு பொதுவாக வரக்கூடிய புராஸ்டேட் சுரப்பி சம்பந்தமான நோய்கள் மற்றும் அவற்றிற்குறிய சிகிச்சைமுறைபற்றியும், இந்நோய்க்கான யோகா பயிற்சியின் அஸ்வினி முத்திரை குறித்தும் விவரித்தார். பேரா. முனைவர் பொன். நடராசன் அவர்கள் கூட்டத்திற்குப்பின் மதிய உணவு குறித்து பேசினார். தொடர்ந்து வழக்கம்போல மாதக்கூட்டத்தை இரண்டாவது சனிக்கிழமை மாலை 05.00





மணிக்கு நடத்துவது பற்றி விவாதிக்கப்பட்டது. இதுகுறித்து பேரா. எஸ். வி. சுப்புராம், பேரா. ச. சந்திரசேகரன், பேரா. த. பழமலை, பேரா. முனைவர். ந. கன்னையா ஆகியோர் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தனர். இறுதியில் முன்போலவே மாதக் கூட்டம் இரண்டாவது சனிக்கிழமை மாலை 05.00 மணிக்கு நடத்துவது என்றும், கூட்டத்தை தொடர்ந்து சிற்றுண்டி மற்றும் இரவு உணவுக்கான செலவை அம்மாதம் பிறந்தநாள் மற்றும் மணநாள் காணும் உறுப்பினர்கள் பகிர்ந்துகொள்வது என்றும் முடிவு செய்யப்பட்டது. இம்மாதம் பிறந்த நாள் காணும் பேரா. எஸ். வி. சுப்புராம் மற்றும் பேரா. முனைவர் ந. கன்னையா ஆகியோருக்கும், மணநாள் காணும் பேரா. பீ. தனஞ்செயன் அவர்களுக்கும் உறுப்பினர்கள் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்தனர். இறுதியாக மாநிலப் பொதுக்குழு உறுப்பினர் பேரா. இர. நிசார் அவர்களது நன்றியுரைக்குப் பின் கூட்டம் நிறைவடைந்தது. கூட்டத்திற்குப்பின். பேரா. முனைவர் பொன். நடராசன் அவர்கள் சிறப்பு விருந்து ¶ ¹ Ý>Vi . **அடுத்த மாதக்கூட்டம் 11. 01. 2020 சனிக்கிழமை மாலை 05. 00 மணிக்கு வி. ஆர். பி. மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெறும் என்றும், தொடர்ந்து திருமதி ஆர். பானுமதி (குடும்பஓய்வூதியர்) அவர்கள் அளிக்கவுள்ள விருந்து நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டது.**

பேரா. முனைவர். **மு. சேகர்,**
செயலர், விழுப்புரம் கிளை. செல்: 94437 29660.

**மதுரை கிளை**

கிளையின் அனைத்து உறுப்பினர்களுக்கும் செயலர் என்ற முறையில் கிளையின் சார்பில் கிறிஸ்துமஸ், புத்தாண்டு மற்றும் பொங்கல் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். கிளையின் புதியதாக டிசம்பர் 2019-ல் மூன்று உறுப்பினர்கள் புதிய உறுப்பினர்கள் சேர்ந்துள்ளனர். அவர்களின் விவரம் தங்களின் பார்வைக்கு கீழ்க்கண்டவாறு பகிர்ந்து கொள்கிறேன். அவர்களுக்கு TANRECTA Speaks அனுப்பி வைக்க தக்க ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டுகிறேன். நிதிகள் விரைவில் அனுப்ப ஏற்பாடு செய்கிறேன். முனைவர் G. முத்துசாமி, முனைவர் P. ராஜேந்திரன், முனைவர் N. லட்சுமணன், மதுரைக் கிளையின் பொதுக் குழுக் கூட்டம் 17.12.2019 அன்று காலை 10.30 மணிக்கு மூட்டா அலுவலகம் பேரா V. சண்முகசுந்தரம் அரங்கில் நடைபெற்றது. கூட்டத்திற்கு கிளையின் தலைவர் முனைவர் A. மனோகரன் தலைமை வகித்தார். கூட்டத்தில் மொத்தம் 72 உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள். கூட்டத்திற்கு வருகை புரிந்த அனைத்து உறுப்பினர்களையும் வரவேற்று கிளையின் இணைச் செயலர் பேரா. K.V. ஆனந்தன் அவர்கள், வரவேற்புரை நிகழ்த்தினார்.

**ஓய்வூதியர் தினம்** : - ஓய்வூதியர் தினம் (Pensioners day) குறித்து கிளையின் செயலர் முனைவர் N. பெரியதம்பி அவர்கள் விவரமாக முன்மொழிந்தார். நமது கிளையின் பொதுக்குழு இன்றைய ஓய்வூதியர் தினமான 17.12.2019 அன்று நடைபெறுவது குறித்து செயலர் பெருமிதம் அடைவதாக மகிழ்ச்சியை தெரிவித்தார். ஓய்வூதியர் தினம் என்பது 1982-ல் டிசம்பர் மாதம் 17ந் தேதி அன்று வரலாற்று சிறப்பு மிக்க உச்சநீதிமன்ற தீர்ப்பு வழங்கப்பட்டது. எனவே ஒவ்வொரு

ஆண்டும் டிசம்பர் 17ந் தேதி அகில இந்திய அளவில் அனைத்து தொழிற்சங்கள் மற்றும் இயக்கங்களும் ஓய்வூதியர் தினமாக கொண்டாடப்பட்டு – வருகிறது.

**பிறந்தநாள் வாழ்த்து:** 2019 டிசம்பர் மாதம் பிறந்தநாள் கொண்டாடும் பேராசிரியர்களின் பெயர்களை இணைச் செயலர் பேரா K.V. ஆனந்தன் அவர்களை தொகுத்து வாசிக்க அனைத்து உறுப்பினர்களின் சார்பில் செயலாளர் முனைவர் N. பெரியதம்பி அவர்கள் TANRECTA மதுரை கிளையின் உறுப்பினர்களுக்கு பிறந்த நாள் வாழ்த்துக்களை தெரிவித்தார். அவர்களுக்கு பொன்னாடை போர்த்தி பேராசிரியர்கள் கௌரவித்தனர். இந்த மாதம் பிறந்தநாள் கொண்டாடிய பேராசிரியர்கள் மொத்தம் ஏழு பேர்கள். பேரா M. கிருஷ்ணன் அவர்கள் தனது பிறந்தநாளை கொண்டாடும் விதமாக அனைத்து உறுப்பினர்களுக்கும் மதிய உணவு வழங்கினார்கள். மற்ற ஆறுபேரும் வழக்கமாக வழங்கும் ரூ.500 வழங்கினார்கள்.

**செயலாளர் அறிக்கை :** இக்கிளையின் புது முயற்ச்சியாக மாதாந்திர நாட்காட்டி தயாரிக்கப்பட்டு அனைத்து உறுப்பினர்களுக்கும். பொதுக்குழுவில் வழங்கப்பட்டது. மாதாந்திர நாட்காட்டி தயாரிக்க நிதி உதவி வழங்கிய 53 உறுப்பினர்களுக்கும் கிளையின் சார்பில் நன்றி தெரிவிக்கப்பட்டது. ஓய்வூதியர் தின நினைவாக ஒவ்வொரு உறுப்பினருக்கும் பேனா வழங்கப்பட்டது. கிளையின் 19.11.2019 அன்றும் 26.11.2019 நடைபெற்ற இரண்டு கிளை செயற்குழுக் கூட்டம் தொடர்பாகவும் அதில் மேற்கொள்ளப்பட்ட குழுக்கள் நியமனம் மற்றும் தீர்மானங்கள் தொடர்பாகவும் செயலளர் Dr.N.பெரியதம்பி அவர்கள் விரிவாக எடுத்துரைத்தார். மேற்கண்ட குழுக்கள் மற்றும் தீர்மானங்களை முனைவர் G. ஜெகநாதன் முன்மொழிய அவைகள் அனைத்திற்கும் பொதுக்குழு ஒப்புதல் வழங்கியது. AIFRUCTO, பொதுச் செயலர் Dr.B. பார்த்தசாரதி அவர்கள் கிராமப்புற மாதிரிப் பள்ளி பற்றியும், ஓய்வூதியர் தினம் மற்றும் AIFRUCTO செய்திகளை விரிவாக எடுத்துரைத்தார்.

**நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் :**

1. 14940 உயர்துவக்க ஊதியம் தனியார் கல்லூரி (அரசு உதவி பெறும்) ஆசிரியர்களுக்கு பெற்றுத்தர மதுரை உயர்நீதிமன்ற கிளையில் வழக்கு தொடர் சட்ட குழுவின் முடிவின் அடிப்படையில் மாநிலப் பொதுச்செயலரை கலந்தாலோசித்து நீதிமன்றம் செல்வதற்கு மாநிலத் தலைமையின் ஒப்புதல் பெறப்பட்டு மற்ற கிளைகளையும் இணைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும் எனவும் 26.11.2019 செயற்குழு தீர்மானித்து தலைமையை வேண்டிக்கொள்கிறது.
2. 17.09.2019 அன்று திருச்சியில் நடைபெற்ற மாநில செயற்குழுவின் முடிவின் அடிப்படையில் மாநிலத் தேர்தலில் வேட்பாளருக்கான தகுதியினை மாநிலத் தேர்தல்குழு நிர்ணயம் செய்து அனுப்பியுள்ளது. அதாவது 2018-2019 ஆம் ஆண்டிற்கான ஆண்டு முடிய உள்ள காலத்திற்கு செலுத்த வேண்டிய உறுப்பினர் கட்டணம் நிலுவை இன்றி செலுத்தி இருக்க வேண்டும். அத்துடன் கட்டிட நிதி இயக்க வளர்ச்சி நிதி, பேரா அரங்க நரசிங்கம் அறக்கட்டளை நிதி, AIFRUCTO ஆயுள் சந்தா ஆகியவற்றையும் செலுத்தியிருக்க வேண்டும். மேலே கண்ட நிதிகளை செலுத்தியவர்கள் மட்டும் தேர்தலில் போட்டியிட தகுதியுள்ளவர் ஆவார்கள். மேலும் போட்டியிடுபவர்கள் கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் பிற நடவடிக்கைகளிலும் குறைந்தது 50% பங்கேற்றிருக்க வேண்டும், என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்கண்ட நிபந்தனைகளில் உறுப்பினர் சந்தா மற்றும் 50% கூட்டங்களில் பங்கேற்பு மட்டும்தான் இயக்கவிதி (V) (அ)வில் உள்ளது. எனவே இயக்க விதிக்கு புறம்பாக மேற்கண்ட நிபந்தனைகள் அனைத்தும் மாநிலத்தேர்தலில் திணிக்கப்படுகிறது என இச்செயற்குழு கருதுகிறது.
   எனவே இந்த இயக்க விதிக்கு முரணான நிபந்தனைகளை விலக்கிக் கொள்ளுதல் அல்லது முற்றிலுமாக திரும்பபெற வேண்டுமென இச்செயற்குழு தீர்மானித்து மாநிலத் தேர்தல் குழுவையும் மாநிலத் தலைமையும் 19.11.2019 செயற்குழு வேண்டிக்கொள்கிறது. மாநிலத் தேர்தல் குழு தன்னாட்சி அமைப்பு என்பதை நிரூபணமாக்கவும் இச்செயற்குழு வேண்டுகிறது.
3. 17.12.2019 பொதுக் குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் தனது பிறந்த நாளை முன்னின்று மதிய உணவு வழங்கி பேரா M. கிருஷ்ணன் அவர்களுக்கு இப்பொதுக்குழு நன்றியினையும் பிறந்த நாள் வாழ்த்துக்களையும் மற்றும் பாராட்டுக்களையும் தெரிவித்து கொள்கிறது.
4. மாதாந்திர நாட்காட்டி 2020-க்கு தாராள நிதி உதவி வழங்கிய 53 பேராசிரியர்களுக்கும் இப்பொதுக்குழு நன்றியினை தெரிவித்துக் கொள்கிறது.

**வங்கி நிதிப் பரிவர்த்தனை விவரங்கள்:**
S.B. A/c. 004901000034557, Indian Overseas Bank, Madurai Main, IFSC Code: IOBA0000049, Name of the A/c. Tamilnadu Retired College Teachers Association 1. ஆண்டு சந்தா : ரூ.500, 2. அறக்கட்டளை நிதி:500, 3. வளர்ச்சி நிதி: 500, 4. AIFRUCTO ஆயுள் சந்தா .1000, 5. TANRECTA Speaks : 200 Total Rs. 2700/- பணம் கட்டியதற்கு ஆதாரமாக SMS கிளைப் பொருளாளருக்கு முனைவர் R. வள்ளி அவர்களுக்கு அனுப்பிவைக்கவும்.

**நன்றியுரை:** கிளையின் பொருளாளர் நிறைவாக கூட்டத்தில் பங்கேற்ற அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்கள் கூட்டம் இனிதே முடிவுற்றது. **அடுத்த மாதாந்திரக் கூட்டம் 21.01.2020 அன்று செவ்வாய் கிழமை காலை 10.30 மணிக்கு மூட்டா அலுவலகத்தில் நடைபெறும் உறுப்பினர்கள் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறேன்.**

முனைவர். **என். பெரியதம்பி,**
செயலர், மதுரை கிளை.

**கன்னியாகுமரி கிளை**

கன்னியாகுமரிக் கிளையின் மாதாந்திரக் கூட்டம் 10.12.2019 அன்று மாலை 4.30மணிக்குத் தலைவர் பேரா.Dr.R. இலட்சுமணசர்மா தலைமையில் நடந்தது



Generated by Foxit PDF Creator © Foxit Software
http://www.foxitsoftware.com For evaluation only.

கூட்டத்திற்கு வந்தவர்களை பேரா. S. திரவியம் வரவேற்றுப் பேசினார். கூட்டத்தின் தொடக்கத்தில் நாகர்கோவில் இந்துக் கல்லூரி பேராசிரியர். K. விநாயகமூர்த்தி அவர்களின் மரணச்செய்திக்கு அஞ்சலி செலுத்தப்பட்டு, இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அன்னாரின் பெருமைகள் பற்றிக் கிளைத்தலைவர் விவரித்தார். தொடர்ந்து செயலாளர் அறிக்கைபடித்தளித்தர். கன்னியாகுமரிக் கிளையில் சிலபேர்களுக்குப் புதிய ஓய்வூதியம் இன்னும் வராமலிருப்பது பற்றிச் செய்திகள் அறிய திருநெல்வேலியில் கல்லூரிக் கல்விதுறை இணை இயக்குநர் அலுவலகத்திற்குக் கிளைத்தலைவர், செயலாளர், பொருளாளர் என மூவரும் சென்றிருந்தோம். சிலருடைய ஊதிய நிர்யணத்திற்கு A.G. அலுவலக அனுமதிக்காகக் காத்திருப்பதாகவும், சில பேர்களின் Service Register தேடப்பட்டுக் கொண்டிருப்பதாகவும் அவர்களிடமிருந்து பதில் கிடைத்தது. இவர்களுக்கு மிக விரைவில் கிடைக்கவில்லை எனில் நாங்கள் இன்னும் சென்று பார்ப்பதாக உள்ளோம். விரைந்து கிடைக்க ஆவன செய்வோம். இங்ஙனம்நடந்த கூட்டம்மாலை 5.30 மணிக்கு நிறைவடைந்தது. கூட்டத்தின் முடிவில் பேரா. R. மாடசாமி அவர்கள் நன்றி கூறினார்கள். அடுத்த கூட்டம் 14.1.2020 அன்று நாகர்கோவில் .Y.M.C.A அரங்கில் வைத்து மாலை 4.30 மணிக்கு நடைபெறும். நம் கழகத்தின் உறுப்பினர் அனைவருக்கும் புத்தாண்டுவாழ்த்துக்களை மனமாரக் கூறி மகிழ்கின்றோம்.

முனைவர். **எஸ். குமாரசுவாமி,**
செயலர், கன்னியாகுமரி கிளை,
செல்: 94435 81130.

## திருநெல்வேலி கிளை

இக்கிளையின் டிசம்பர் 2019 மாதாந்திரக் கூட்டம் 12-12-2019 அன்று மாலை 6 மணிக்கு பேரா. M. கதிர்வேல் ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றது. வருகைபுரிந்த உறுப்பினர்களை பேரா. P. ஜெகந்நாதன் வரவேற்றார். இந்த ஆண்டிற்கு இதுவரை சந்தாத் தொகை செலுத்தாதவர்கள் விரைந்து சந்தாத் தொகை ரூ. 400/- ஐ செலுத்துமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அடுத்த 3 ஆண்டுகளுக்கான புதிய மாநில பொறுப்பாளர்களுக்கு இக்கிளை தனது வாழ்த்துக்களையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

இக்கிளையின் புதிய உறுப்பினர்களாக பேரா. Dr. V. கட்டளை கைலாசம் (தமிழ்த் துறை, இந்துக் கல்லூரி, திருநெல்வேலி) மற்றும் பேரா.Dr.S. இராமச்சந்திரன் (வணிகவியல் துறை, திருவள்ளுவர் கல்லூரி, பாபநாசம்) ஆகிய இருவரும் இணைந்துள்ளனர். புதிய உறுப்பினர்களை கரஒலி எழுப்பி வரவேற்றனர். மேலும் இன்றைய கூட்டத்தில் கலந்து கொண்ட பேராசிரியர்கள் அனைவரும் தங்களை அறிமுகமும் செய்து கொண்டனர். இம்மாதம் (ஜனவரி 2020) பிறந்த நாள் கொண்டாடும் பேராசிரியர்கள் I.S. காந்திமதிநாதன், அப்துல் ஹையு, T. செய்யது இஸ்மாயில், K. செய்யது அப்பாஸ், K. மருத்தின் ஜெயன்



Generated by Foxit PDF Creator © Foxit Software
http://www.foxitsoftware.com For evaluation only.



ஆகியோர் நோயற்ற வாழ்வுடனும், புகழுடனும், மன அமைதியுடனும் வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டி இச்சங்கம் அவர்களை வாழ்த்துகின்றது. பேராசிரியர் T. பார்வதிநாதன் வழங்கிய இன்சுவை விருந்திற்குப் பின் பேரா. S. காந்திமதி நன்றி í Å í â¦ D ÖM m Wç Å¡ uÅm. **ஜனவரி 2020, மாதக் கூட்டம் 09-01-2020 (இரண்டாம் வியாழன்) அன்று மாலை 6 மணிக்கு வழக்கம் போல் ஜங்ஷன், MOT இந்துக் கல்லூரி மேனிலைப் பள்ளியில் நடைபெறும். உறுப்பினர்கள் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்கும் படி அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**

பேரா. **தி. பார்வதிநாதன்,**
செயலர், திருநெல்வேலிக்கிளை

## கும்பகோணம் கிளை

கும்பகோணம் கிளையின் கூட்டம் கோபாலராவ் நூலக வளாகத்தில் 14-12-2019 அன்று மாலை 5.30 மணியளவில் நடைபெற்றது. கிளைத் துணைத் தலைவர் முனைவர் ச. மணி அவர்கள் திருக்குறள் சொல்லக் கூட்டம் துவங்கியது. கிளைத் தலைவர் பேரா.சி. இராஜசேகரன் அவர்கள் தலைமை ஏற்று வரவேற்புரை நிகழ்த்தினார். செயலாளர் பேரா. மாரிமுத்து அவர்கள் கடந்த மாத நிகழ்வுகளை விளக்கினார். அனைவருக்கும் கிறிஸ்துமஸ் மற்றும் ஆங்கிலப் புத்தாண்டு வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டது. இம்மாதம் பிறந்த நாள் காணும் நமது உறுப்பினர்கள் முனைவர் ச. மணி, பேரா. எஸ். நடராஜன் மற்றும் முனைவர் கே. அன்பழகன் ஆகியோருக்குக் கூட்டத்தில் பிறந்த நாள் வாழ்த்துத் தெரிவிக்கப்பட்டது. தமிழ்நாடு அரசு அனைத்துத்துறை ஓய்வூதியர் சங்கப் பொறுப்பாளர்கள் வட்டத்தலைவர் தோழர் ஏ. துரைராஜ், செயலாளர் தோழர் கி. பக்கிரிசாமி, மாவட்டத் துணைத்தலைவர் தோழர் பழ. அன்புமணி ஆகியோர் வருகை தந்தனர். கும்பகோணத்தில் 24.12.2019 அன்று சங்கத்தின் சார்பில் நடைபெற உள்ள நரம்பியல்துறை சிகிச்சை பற்றிய மருத்துவ விழிப்புணர்வு முகாமில் நமது உறுப்பினர் பங்கேற்க அழைப்பு விடுத்தனர்.

**கீழ்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:**

1. மாநிலத் தேர்தலில் போட்டியிடவும் கிளைத்தேர்தலில் போட்டியிடவும் சந்தா மட்டுமே செலுத்தி இருந்தால் போதும்; ஏனைய நிதிகள் செலுத்தி இருப்பதைத் தகுதியாகக் கொள்ளக் கூடாது என்பதை வலியுறுத்தித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
2. ஒருவர் ஒரு பதவிக்கு மட்டுமே போட்டியிடலாம் என்ற விதியை வரவேற்கும் இக்கிளை ஒருவர் வேட்பு மனுவை ஒரே பதவிக்கு மட்டுமே தாக்கல் செய்ய வேண்டும்; இரு பதவிகளுக்குத் தாக்கல் செய்ய அனுமதிக்கக் கூடாது என்பதை இக்கிளை வலியுறுத்துகிறது.

கூட்டத்தின் நிறைவில் இணைச் செயலாளர் முனைவர். எஸ். சோலையப்பன் நன்றி கூறினார். **அடுத்த கூட்டம் 11.01.2020 அன்று மாலை நடைபெறும் என்ற அறிவிப்போடு கூட்டம் இனிதே நிறைவுற்றது.**

பேரா.**ப. மாரிமுத்து**
செயலர், கும்பகோணம் கிளை

Generated by Foxit PDF Creator © Foxit Software
http://www.foxitsoftware.com For evaluation only.



**ஈரோடு கிளை**

ஈரோடு கிளையின் மாதாந்திர பொதுக்குழுக் கூட்டம் கடந்த 14-12-2019 அன்று காலை 10-30 மணிக்கு ஈரோடு கிளையின் தலைவர் முனைவர் K.R. பரமசிவம் அவர்கள் தலைமையில் ஈரோடு ஒற்றுமை அரங்கில் நடைபெற்றது. கிளையின் முன்னாள் செயலர் பேரா. M. கோபாலசாமி அவர்கள் தனது செயலர் பொறுப்புகளை பேரா. N. கோகுல சந்தான கிருஷ்ணன் அவர்களிடம் சமர்ப்பிப்பதற்கு முன்னதாக இன்றைய கூட்டத்தினையும் முன்னாள் பொறுப்பாளர்களே நடத்தி முடித்தனர். கூட்டத்தினரை வரவேற்று பேரா. M. கோபாலசாமி அவர்கள் தனது உரையினை துவக்கினார். முதலாவதாக அனைவருக்கும் இனிய ஆங்கில புத்தாண்டு மற்றும் கிறிஸ்துமஸ் வாழ்த்துக்களை தெரிவித்தார். அடுத்து கடந்த 19-11-2019 அன்று கோவை R J D அலுவலகத்திற்கு செயலர், பொருளாளர் கோவை பேராசிரியரும் நமது அமைப்பின் மாநில துணைத்தலைவருமான பேரா. M. இராஜகோபாலன் அவர்களுடன் கோவை **RJD** அவர்களை அவரது அலுவலகத்தில் சந்தித்து இதுவரை தீர்வு காணப்படாத கோரிக்கைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தினோம். R J D அவர்கள் எங்களிடம் உறுதி அளித்தார். 17-12-1982 தினமான ஓய்வூதியர் தின வாழ்த்துக்களும் அது சார்ந்த கருத்துக்களும் அனைவரிடமும் விவரிக்கப்பட்டது.

கடந்த நவம்பர் மாதத்தில் 27 மற்றும் 28 தேதிகளில் நமது மையப் பொறுப்பாளர்கள் சென்னையில் இயக்குநர் மற்றும் தலைமைச் செயலக அதிகாரிகளுடன் மேற் கொண்ட சந்திப்பு குறித்து கூட்டத்தில் தெரியப்படுத்தப்பட்டது. அடுத்து இம்மாதம் பிறந்த நாள் காணுகின்ற மூன்று பேராசிரியர்களின் பெயர்கள் வாசிக்கப்பெற்று வாழ்த்தும் கூறப்பட்டது. இன்றைய கூட்டத்திற்கு கோவையிலிருந்து நமது TANRECTA அமைப்பின் மாநில துணைத்தலைவர் பேரா. M. இராஜகோபால் அவர்கள் வருகை புரிந்து கூட்டத்தினரிடம் மத்திய பொறுப்புக்கான தேர்தலில் தனது வேட்புமனு பற்றி விரிவாகப் பேசி தனக்கு வாக்களிக்க கேட்டுக் கொண்டார். அடுத்துப் பேசிய முன்னாள் பொருளாளர் பேரா. B. பிரபாகரன் அவர்கள் ஈரோடு கிளை பற்றியும், Unity Hall பற்றியும் ஆட்சிக்குழுவுக்கான தேர்தல் பற்றியும் விவரித்தார்.

அடுத்ததாகப் பேசிய பேரா. K.P. தனசேகரன் அவர்கள் இராமாயணத்தில் தொடங்கி தனக்கே உரித்தான வகையில் முன்னாள் பொறுப்பாளர்களையும் பாராட்டியவர் இன்னாள் பொறுப்பாளர்களையும் வரவேற்று பேசினார். இவரை அடுத்துப்பேசிய முனைவர் J.சுப்பிரமணியன் அவர்கள் AUT பற்றியும் TANRECTA தேர்தலில் AUTக்கான Representation பற்றியும் வலியுறுத்தி உரையாற்றினார். பின்னர் முன்னாள் இந்நாள் பொறுப்பாளர்களை பாராட்டியும் வாழ்த்தி வரவேற்றும் பேசினார். **ஈரோடு கிளையின் அடுத்த கூட்டம் வழக்கம்போல் புத்தாண்டாம் 2020ல் ஜனவரி மாதம் (11-01-2020)ல் காலை 10-45க்கு நடைபெறும்.**

**M. கோபாலசாமி**
முன்னாள் செயலர், ஈரோடு கிளை





**காஞ்சிபுரம் கிளை**

காஞ்சிபுரம் கிளையின் பொதுக்குழுக் கூட்டம் ஓய்வூதியர் தினமான 17-12-2019 செவ்வாய் அன்று காலை 10-00 மணியளவில் பச்சையப்பன் ஆடவர் கல்லூரியில் நடந்தது. வந்திருந்த உறுப்பினர்களை தலைவர் வரவேற்று பேசிய பின்னர் துணைத்தலைவர் நன்னெறி நூல்களைப் பற்றி பேசினார். பிறகு கூட்ட நிகழ்வுகள் எடுத்துக் கொள்ளப்பட்டன.

**விவாத விவரங்களும் ஏற்கப்பட்ட தீர்மானங்களும்:-**

1. நவம்பர், டிசம்பர் 2019 மாதங்களில் நிகழ்ந்த இயக்க நடவடிக்கைகளை செயலர் விவரித்தார்.
2. 14-11-2019 அன்று மறைந்த மூத்த உறுப்பினர் ப்பி.பி.ஆர் சுப்ரமணிய சாமியின் துணைவிக்கு குடும்ப ஓய்வூதியம் பெற்றுத் தர அனைத்து முயற்சிகளையும் செய்வதாக செயலர் கூறினார்.
3. 2020-22 ஆண்டுகளுக்கான மையப் பொறுப்பாளர்கள் தேர்தலில் பங்கேற்று ஜனநாயகக் கடமையை நிறைவேற்றவும் பயணச் செலவை கிளையே ஏற்றுக் கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டது.
4. மைய அரசு 19 ஆண்டுகள் பணிபுரிந்து ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கு முழு ஓய்வூதியம் வழங்குவதைப் போன்று மாநில அரசும் ஆணை பிறப்பிக்க ஆவன செய்யுமாறு மைய பொறுப்பாளர்களை இப்பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது.
5. 2005-06ல் பணி நீட்டிப்பு பெற்று கல்வியாண்டு வரை மீளப் பணியமர்த்தப்பட்டு பணியாற்றி ஓய்வு பெற்ற பேராசிரியர்களுக்கு 01-01-06 முதல் வழங்கப்பட்ட ஓய்வூதியப் பலன்களை வழங்கும் வகையில் ஆணையைப் பெற மைய அமைப்பு முயல வேண்டுமென இப்பொதுக்குழு வேண்டுகிறது.
6. 01-01-96 முதல் அமல்படுத்தப்பட்ட 5வது மைய ஊதியக் குழுவின் பரிந்துரைபடி வழங்கப்பட்ட உயர் துவக்க ஊதியம் ரூ. 14940/- இது நாள் வரை கிடைக்கப் பெறாது பணி மேம்படுத்தப்பட்ட பேராசிரியர்களுக்கும் அரசு நிதி உதவி பெறும் கல்லூரிப் பேராசிரியர்களுக்கும் கிடைத்திட வழக்கு தொடர பொதுச் செயலரை அணுகுவது என தீர்மானிக்கப்பட்டது.
7. கடந்த 09-09-2012 அன்று வேலூரில் நமது இயக்கம் நடத்திய 12வது மாநில மாநாட்டில் வெளியிட்ட ஓய்வூதியர் ஆணைகள் தொகுப்பிணை போன்று அப்போது முதல் தற்போது வரை அரசு வெளியிட்ட ஆணைகளைத் தொகுத்து 2020ல் வழங்க ஆவன செய்ய வேண்டுகிறது.
8. புத்தாண்டு வாழ்த்துக்களை உறுப்பினர்கள் தங்களுக்குள் பகிர்ந்துக் கொண்டவுடன் அடுத்த கூட்டம் 08-01-2020 அன்று கல்லூரியில் நடைபெறும் என்ற அறிவிப்புடன் செயலர் நன்றி நவில கூட்டம் இனிதே நிறைவேறியது.

**E.M. சுப்ரமணியன்,**
செயலர், காஞ்சிபுரம் கிளை.

Generated by Foxit PDF Creator © Foxit Software
http://www.foxitsoftware.com For evaluation only.



## பழனிக் கிளை

பழனிக் கிளையின் டிசம்பர் மாதக் கூட்டம் 11.12.2019 புதன்கிழமை மாலை 5 மணிக்கு நளபாகம் உணவகத்தின் விழா அரங்கில் நடைபெற்றது. கிளைத் தலைவர் பேராசிரியர் இரத்தினசபாபதி தலைமையேற்று நிகழ்ச்சிகளைத் தொகுத்தளித்தார். பேராசிரியர் P. கருணாநிதி இறைவணக்கம் பாடினார்.

**பிறந்தநாள் வாழ்த்து:** டிசம்பர் மாதம் பிறந்தநாள் காணும் பேராசிரியர்கள் திரு. N. குமர குருபரன், திரு. R. பாஸ்கரன், திரு. P. முத்துச்சாமி, திரு. S. வைரவேல், திரு. R. மதிவாணன் ஆகிய ஐவரையும் வாழ்க பல்லாண்டு என வாழ்த்துரைத்துப் பாராட்டினார் கிளைத் தலைவர்.

**'பாட்டுக்கொரு புலவன்' பாரதியாரின் பிறந்தநாள்:** பழனிக் கிளையின் முன்னாள் தலைவர் பேராசிரியர் S.P. மாணிக்கம் பாரதியாரின் 138 - வது பிறந்தநாளை நினைவு கூர்ந்தார். 'தனியொரு மனிதனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்' என்று பாடிய மனிதாபிமானப் புலவன் என்றார். கிளைத் துணைத்தலைவர் பேராசிரியர் P. சுப்பிரமணியன், பாரதியார் தான் வறுமைப்பட்டபோதும், சமுதாயம் மேன்மை பெறுதற்குப் பாட்டிசைத்த பாரதி எனப் புகழ்ந்தார். மைய மன்ற இணைச்செயலர் பேராசிரியர் S. சிவசண்முகம் பாரதியாரை 'ஒரு புரட்சியாளர் (Rebel)' என்றும், 'அச்சமில்லா கவிவாணர்' என்றும் பாராட்டினார். பெண்கள் முன்னேற்றம், பெண்விடுதலை என்று பாடிய உயர்ந்த கவிஞர் பாரதியார் என்றார் பொதுக்குழு உறுப்பினர் பேராசிரியை கல்யாணசுந்தரி. தொடர்ந்து பேசிய மைய மன்றத் துணைத் தலைவர் பேராசிரியர் N.மாரிசாமி 28.10.2019-ல் திருச்சியில் நடைபெறவிருக்கும் மையமன்றப் பொறுப்பாளர்கள் தேர்தல் செய்திகளை எடுத்துரைத்தார்.

பழனிக் கிளையின் ஆட்சிக் குழுவினரும், பொதுக்குழு உறுப்பினரும் ஒன்றாகக் காரில் பயணித்துத் திருச்சிக்குச் சென்று மையக்குழு பொறுப்பாளர் தேர்தலில் வாக்களிக்கலாம் என்று செயலர் பேராசிரியர் S.D.R. சுந்தரமூர்த்தி ஆலோசனை கூறினார். அதை உறுப்பினர்கள் ஆமோதித்தனர்.

**2020 ஆம் ஆண்டு மாதக் காலாண்டர்களும், உறுப்பினர் முகவரிப் புத்தகங்களும் விநியோகம்:-**

ஆண்டுதோறும் பழனிக்கிளை உறுப்பினர்களுக்கு மாதாந்திரக் காலண்டர்கள் அச்சிட்டு வழங்குகிறது. இவ்வாண்டும் காலண்டர்களும், உறுப்பினர் முகவரிப் புத்தகங்களும் அச்சிடப்பட்டன. அவற்றை உறுப்பினர்களுக்கு நேரிலும், கூட்டத்தில் கலந்து கொள்ளாதவர்களுக்கு விடுகளிலும் ஆட்சிக் குழுவினரும், செயற்குழுவினரும் விநியோகித்தனர். வெளியூர்களில் குடியிருக்கும் உறுப்பினர்களுக்கு புரபசனல் கூரியரிலும் அனுப்பி வைக்கப்பட்டன.

**தீர்மானங்கள்:-**

1. நம் பழனிக் கிளையின் மொத்த உறுப்பினர்கள் 102 பேர்கள். எனவே, பழனிக் கிளைக்கு இரண்டு பொதுக்குழு உறுப்பினர்கள் வேண்டும். பொதுச் செயலாளருக்குப் புதுமுகவரிப் புத்தகம் அனுப்புவதென்றும் பேராசிரியர் நாகலிங்கத்தை இரண்டாவது பொதுக்குழு உறுப்பினராக அங்கீகரிக்க வேண்டும் என்று பொதுச் செயலாளரைக் கேட்டுக் கொள்வதென்றம் தீர்மானிக்கப்பட்டது.
2. 2020 ஆம் ஆண்டு மாதாந்திரக் காலண்டர்கள் மற்றும் புதிய உறுப்பினர் முகவரிப் புத்தகங்களை மிகச் சிறப்பாக அச்சிட்டு உரிய காலத்தில் உறுப்பினர்களுக்கு விநியோகிப்பதற்கு வாய்ப்பளித்த முன்னாள் தலைவர் S.P. மாணிக்கத்தையும், பொருளாளர் மேஜர் R. முருகேசனையும் பழனிக் கிளை பாராட்டும் தீர்மானம் நிறைவேறியது.
3. பேராசிரியர் R. மதிவாணனின் இளைய சகோதரர் இயற்கை எய்தியமைக்கு இரண்டு நிமிடம் அமைதி காப்பதற்கும், இரங்கல் தெரிவிப்பதற்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு செயல்படுத்தப்பட்டது.
4. **2020 ஜனவரி மாதக் கூட்டம் 18.01.2020 சனிக்கிழமை பகல் 10 மணிக்கு நளபாகம் விழா அரங்கில் குடும்பவிழாவாக** நடைபெறும் என்றும், பொறுப்பாளர்களுக்குப் பாராட்டு உரைப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

பேரா. **துரை. சுந்தரமூர்த்தி**
செயலர், பழனிக் கிளை

## கரூர் கிளை

கரூர் கிளையின் டிசம்பர் மாதத்திய கூட்டம் 08.12.2019 அன்று கரூர் வாணிபச் செட்டியார் மண்டபத்தில் காலை பத்து மணியளவில் நடைபெற்றது. கூட்டத்திற்கு கிளையின் துணைத்தலைவர் பேரா J. சீனிவாசன் அவர்கள் தலைமை ஏற்றார். கூட்டத்திற்கு கிளை உறுப்பினர்கள் பெரும்பாலானோர் கலந்து கொண்டனர்.

டிசம்பர் மாதத்தில் கிளைத்தேர்தல் மற்றும் மத்திய தேர்தல் நடைபெறவிருப்பதால், தேர்தலில் போட்டியிடும் நபர்களின் விபரம் அறிய உறுப்பினர்கள் வெகு ஆவலோடு எதிர்பார்த்திருந்தனர். அதன் தொடர்பாக கீழ்க்காணும் விபரங்கள் உறுப்பினர்களுக்க தெரிவிக்கப்பட்டது. அவற்றில்:

1. கிளையின் புதிய பொறுப்பாளர்கள் பற்றி தெரிவிக்கப்பட்டது.
2. மாநிலத் தேர்தல் பற்றிய விபரம், அதற்கு போட்டியிடும் நபர்களின் விபரம் பற்றியும், தேர்தல் நாள், தேர்தல் நடைபெறும் இடம் பற்றியும், தேர்தலில் எந்தெந்த பதவிக்கு போட்டி உள்ளது, போட்டியிடும் நபர்கள் யார் யார் என்ற விபரங்களும் தெரிவிக்கப்பட்டது.
3. மத்தியில் போட்டியிடும் நபர்களில் யார் யாருக்கு ஓட்டளிப்பது என்பது பற்றிய ஒருமித்த கருத்தின் அடிப்படையில் எடுக்கப்பட்ட முடிவையும் உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது.
4. கிளை உறுப்பினர்களில், இதுகாறும் தேக்க நிலை மற்றும் நிலுவையிலுள்ள கோரிக்கைகளை விரைந்து முடிக்க வேண்டுமெனவும், அதற்கான முயற்சிகளை துரிதமாக நம் மாநில பொதுச்செயலர் எடுக்க வேண்டுமெனவும் வற்புறுத்தப்பட்டது.
5. 2006 - க்குப் பின் ஓய்வு பெற்றவர்களுக்கான ஓய்வூதிய நிலுவைத் தொகைக்கான (Concordant Table) - ஐ விரைவில் பெறுவதற்கு மாநில

Generated by Foxit PDF Creator © Foxit Software
http://www.foxitsoftware.com For evaluation only.



பொறுப்பாளர்களும், AIFRUCTO பொறுப்பாளர்களும் துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென தலைமையை கேட்டுக் கொண்டுள்ளது.

6. இதுகாறும் கிளைச்சந்தா செலுத்தாத உறுப்பினர்களனைவரும் உடனடியாக பொருளாளரிடம் செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.
7. **அடுத்த கூட்டம் ஜனவரி 12.01.2020 அன்று இதே அரங்கத்தில்** நடைபெறுமென தெரிவிக்கப்பட்டது.
8. அனைத்து TANRECTA மற்றும் AIFRUCTO உறுப்பினர்களனைவருக்கும் இனிய கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு வாழ்த்துக்களை கிளையின் சார்பாக தெரிவிக்கலாகிறது.
9. இறுதியில் கிளையின் துணைச் செயலர் பேரா. V. பழனிச்சாமி அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவுற்றது.

பேரா V. **பழனிச்சாமி**
செயலாளர், கரூர் கிளை

## வேலூர் கிளை

வேலூர் கிளையின் டிசம்பர் மாதக் கூட்டம், புதிய தலைவர் பேரா. Dr. R. கணேசன் தலைமையில் வேலூர் ஆசிரியர் இல்லத்தில் 17.12.2019, பகல் 11.30 மணிக்குச் சிறப்பாக நடந்தது. செயலர் Dr. மு. குருசாமி அனைவரையும் வரவேற்றார். டிசம்பர் மாதம் பிறந்தநாள் காணும் பேரா. P. கிரீடா விக்டோரியா (01.12.1947), பேரா. A. அண்ணாமலை (04.12.1945), பேரா. L. பழனிவேலு (21.12.1946), பேரா J. கிருஷ்ணமூர்த்தி (26.12.1936), பேரா. K. திருபுரசுந்தரி (26.12.1950), பேரா T. பிரேமகுமாரி (28.12.1947) ஆகிய அறுவருக்கும் பிறந்தநாள் வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டன. ஓய்வூதியர்களுக்கும் நல்வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

28.12.2019, காலை 11.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணிவரை திருச்சியில் நடைபெறவிருக்கும் மாநிலச் செயலர், மற்றும் மாநிலப் பொருளர்களுக்கான தேர்தல் பற்றிச் செயலர் எடுத்துரைத்தார். கிளையின் புதிய பொறுப்பாளர்கள் அறுவரும் அன்று வாக்களிப்பில் தவறாது பங்கேற்கவும் கேட்டுக் கொண்டார். கிளையின் இதரச் செலவுகளுக்கு ஒவ்வொரு உறுப்பினரும் ஆண்டுச் சந்தா தவிர ரூபாய் இருநூறு வசூலிக்கக் கூட்டத்தில் முடிவானது. அதன்படி 26 உறுப்பினர்கள் அன்றையக் கூட்டத்திலேயே போய் இருநூறு வீதம் பணம் செலுத்திவிட்டார்கள். அப்போது செலுத்தாதவர்கள் புதிய கிளைப் பொருளாளர் பேரா. B. அமரசூரியா– விடம் செலுத்திடக் கேட்டுக்கொள்ளப்படுகிறாள்.

அடுத்த மூன்றாண்டுகளுக்குகான கிளையின் புதிய உறுப்பினர்கள் அறுவரும் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு கிளைச் செயலர் அனைவருக்கும் நன்றி பாராட்டினார். தேர்தல் அதிகாரியாகச் செயல்பட்ட பேரா. பொ. இராசேந்திரனுக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது.

2019 – ஆம் ஆண்டிறுதிக் கூட்டத்திற்கு பேரா. டி.எம். செல்லத்துரை, பேரா ஜான் ஞானக்கண், பேரா. எஸ். தியாகு குமார், பேரா. டி. பால்ராஜ் ஆகிய நால்வரும் இணைந்து அறுசுவையுடன் சைவம் மற்றும் அசைவ உணவு வகைகளை





அனைவருக்கும் விருந்தாக, மதிய உணவாக அளித்துப் பெருமை சேர்த்தார்கள். இப்பேராசிரியர்கள் நால்வரும் ஊரிசுக் கல்லூரியில் பணியாற்றி ஓய்வுபெற்றவர்கள். அந்நால்வருக்கும் நன்றி. வழக்கம்போல் பேரா. ஆர். ஆனந்தன் வாழைப்பழத்துடன் கிருஸ்துமஸ் கேக் பரிசளித்து மகிழ்ந்தார்கள். அன்னாருக்கும் எம் நன்றி உரித்தாகுகிறது.

**ஜனவரி, 2020-மாதக் கிளைக் கூட்டம், அம்மாதத்தின் இரண்டாவது செவ்வாய்க் கிழமைக்குப் பதிலாக, முதல் செவ்வாய்க் கிழமையன்று, (07.01.2020) அன்று வேலூர் ஆசிரியர் இல்லத்தில் மாலை 4.00 மணிக்குத் தொடங்கி நடைபெறும். அனைவருக்கும் கிருஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.**

**முனைவர் மு. குருசாமி**
செயலர், வேலூர் கிளை

## தருமபுரி கிளை

தமிழ்நாடு ஓய்வுபெற்ற கல்லூரி ஆசிரியரின் கழக தருமபுரி கிளையின் 2019 – ன் இறுதி பொதுக்குழுக் கூட்டம் தருமபுரி ஸ்ரீராமா லாட்ஜில் 14.12.2019 அன்று மாலை 4.45 மணிக்கு கிளை துணைத்தலைவர் பேரா. K. குப்புசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு வருகைதந்துள்ள அனைத்து உறுப்பினர்களையும் கிளை செயலர் பேரா. G. சின்னப்பையன் இருகரம் கூப்பி அன்புடன் வரவேற்றார். மாநில பொதுச்செயலர் பேரா. E. P. பெருமாள் அவர்கள் நிறைவேறாத கோரிக்கைகள் பற்றி கூறினார். கிளை பொருளாளர் பேரா. தங்கபாண்டியன் அவர்கள் கிளையின் நிதிநிலைபற்றி எடுத்துரைத்தார். மேலும் அனைவரும் கட்டட நிதியினை வழங்க கேட்டுக்கொண்டனர். இறுதியாக சிற்றுண்டிக்குப் பிறகு கிளை உறுப்பினர் பேரா. செலையன் அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிது நிறைவடைந்தது. **அடுத்த மாதாந்திரக்கூட்டம் 11.01.2020 சனிக்கிழமை மாலை 4.45 மணிக்கு தருமபுரி ஸ்ரீராமா லாட்ஜில் நடைபெறும்.** அனைவருக்கும் புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துக்கள்.

**இரங்கல்:** தர்மபுரி அரசு கலைக்கல்லூரியில் பொருளியல் துறையில் பணியாற்றி ஓய்வுபெற்ற பேரா. என். கோவிந்தராசன் 24.12.2019 அன்று காலமானார். TANRECTA உறுப்பினர்கள் அவரது சொந்த கிராமத்திற்கு சென்று இறுதி மரியாதை செலுத்தினர்.

பேரா G. **சின்னப்பையன்**
செயலர், தருமபுரி கிளை

## இராமநாதபுரம் கிளை

இராமநாதபுரம் கிளையின் மாதாந்திர பொதுக்குழு கூட்டம் 14.12.2019 சனிக்கிழமை மாலை 6.30 மணி அளவில் இராமநாதபுரம் விவேகானந்தா சமுதாயக் கல்லூரி வளாகத்தில் கிளைத்தலைவர் பேரா. முனைவர் R. காசி நாததுரை அவர்களின் தலைமையில் நடைபெற்றது. மாநில அளவில் 29-வது கிளையாக TANRECTA – இராமநாதபுரம் கிளை ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து செயல்பட்டு இன்று 100-வது கிளைக் கூட்டத்தை நடத்தும் சிறப்பு

நிகழ்வை குறிப்பிட்டு ஆரம்பித்த கூட்டத் தலைவர், வருகைபுரிந்த உறுப்பினர்களை வரவேற்றும், இன்றைய கூட்டத்திற்கான கருது பொருள் பற்றிய விளக்கமும் அளித்தார்கள். இன்றைய 100-வது கூட்டத்திற்கு அதிக எண்ணிக்கையில் உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பாக கருத்துக்களை பகிர்ந்து கொண்டார்கள்.

இளையான்குடி கல்லூரியில் வணிகவியல் துறையில் பணியாற்றி ஓய்வு பெற்ற பேராசிரியர் முனைவர் அஸ்ரப் அலி அவர்கள் கிளையின் புதிய உறுப்பினராக இணைந்து கொண்டார்கள். புதிய உறுப்பினர் மற்ற உறுப்பினர்களுக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டார்கள். 28.12.2019 அன்று நடைபெற உள்ள சங்கத்தின் மாநில தேர்தல் தொடர்பாக கலந்து பேசப்பட்டது. ஆட்சிக்குழு உறுப்பினர்கள் ஐந்து பேரும் திருச்சிக்கு சென்று தேர்தலில் வாக்களிப்பது என தீர்மானிக்கப்பட்டது. கிளை உறுப்பினர்கள் 2020 - 21 நிதி ஆண்டுக்கான சந்தா தொகை ரூ. 600 - வழங்குவதென தீர்மானிக்கப்பட்டது. 2019-20 நிதி ஆண்டுக்கான சந்தா வழங்காதவர்கள் உடனே வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டார்கள். கிளையின் புதிய துணைத்தலைவர் பேரா. முனைவர் S. பாலசுப்பிரமணியன் அவர்கள் உறுப்பினர்களுக்கு இரவு உணவினை வழங்கி நண்பர்களின் நன்றியை பெற்றுக் கொண்டார்கள். **அடுத்த கிளை பொதுக்குழு கூட்டத்தை வருகின்ற 11.01.2020 சனிக்கிழமை அன்று மாலை 6.00 மணி அளவில் இராமநாதபுரம் விவேகானந்தர் சமுதாயக் கல்லூரி வளாகத்தில் நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது**. கிளையின் புதிய செயலாளர் பேரா. முனைவர் S. சுரேஷ் தாஸ் அவர்களின் நன்றி உரையுடன் கூட்டம் நிறைவடைந்தது.

**முனைவர் S. சுரேஷ்தாஸ்**
செயலர், இராமநாதபுரம் கிளை

### விருதுநகர் கிளை

விருதுநகர் கிளையின் பொதுக்குழு கூட்டம் 14.12.2019 முற்பகல் 11.00 மணியளவில் விருதுநகர் பாண்டியன் நகர் சடுகுடுக்கா வகையறா V. இராமசாமி நாடார் திருமண அரங்கில் கிளைத்தலைவர் முனைவர் N. இன்பமணி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு வந்திருந்த அனைவரையும் தலைவர் வரவேற்று தலைமையுரையாற்றினார். கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**இரங்கல் தீர்மானம்:-**

15.11.2019 அன்று இறைவனடி சேர்ந்த நமது கிளையின் உறுப்பினர் பேராசிரியர் C. சோமசுந்தரம் (அருப்புக்கோட்டை தேவாங்கர் கலைக்கல்லூரி, தமிழ்துறை தலைவர்) அவர்களது ஆன்மா சாந்தி அடைய கூட்டத்திற்கு வந்திருந்த அனைத்து உறுப்பினர்களும் இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தினர்.

1. இம்மாதம் பிறந்தநாள் கானும் நமது கிளையின் உறுப்பினர்கள் 4 பேரின் பெயர்களை கிளை துணைத்தலைவர் பேரா. S. கருப்பையா அவர்கள் வாசிக்க கூட்டத்திற்கு வந்திருந்த அனைவரும் வாழ்த்துக்களை தெரிவித்தனர்.
2. கூட்டத்திற்கு வந்திருந்த அனைத்து உறுப்பினர்களுக்கும் சுவையான மதிய விருந்து வழங்கிய பேரா. S. சரஸ்வதி, Sri. A.S. ஜெயபாலன் தம்பதியருக்கு இக்கிளை நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.



Generated by Foxit PDF Creator © Foxit Software
http://www.foxitsoftware.com For evaluation only.



3. 2020 ஜனவரி மாத கிளை கூட்டத்திற்கு வரும் அனைத்து உறுப்பினர்களுக்கும் மதிய விருந்து வழங்க இசைந்து நமது கிளையின் மூத்த உறுப்பினர்களுக்கும் மதிய விருந்து வழங்க இசைந்து நமது கிளையின் மூத்த உறுப்பினர் Dr. A. சண்முகசுந்தரம் விடுத்த அழைப்பினை இக்கிளை அன்புடன் ஏற்றுக் கொள்கிறது.
4. குழந்தைகள் தினத்தை முன்னிட்டு 14.11.2019 அன்று விருதுநகர் S.M. நகராட்சி நடுநிலைப்பள்ளி பால்வாடிக் குழந்தைகள் 10 பேருக்கும் வில்லிபத்திரி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி பால்வாடிக் குழந்தைகள் 10 பேருக்கும் ரூ.2000/- மதிப்புள்ள வண்ணப் புத்தாடைகளை நமது கிளையின் சார்பாக வழங்கிய நமது கிளைதலைவர் Dr. N. இன்பமணி அவர்களை இக்கிளை நன்றியுடன் பாராட்டுகிறது.
5. கழக உறுப்பினர்கள் அனைவருக்கும் 2020 ஆண்டு புத்தாண்டு, தைப்பொங்கல், மாட்டுப் பொங்கல், திருவள்ளுவர் தினம், உழவர் திருநாள் மற்றும் குடியரசு தின நல்வாழ்த்துக்களை இக்கிளை தெரிவித்துக் கொள்கிறது.
6. 28.10.2019 அன்று திருச்சியில் நடைபெறும் மாநில செயலர் மற்றும் பொருளாளர் தேர்தலுக்கு வேன் ஒன்று ஏற்பாடு செய்து வாக்காளர்கள் செல்லுவது என்றும் அதற்கான செலவை கிளை ஏற்றுக் கொள்வது என தீர்மானிக்கப்பட்டது.
7. பேரா. நரசிங்கம் அறக்கட்டளை நிதி ரூ.500/- மற்றும் கழக வளர்ச்சிநிதி ரூ.500/- வழங்கிய நமது கிளையின் உறுப்பினராக தங்களை இணைத்துக் கொண்ட முனைவர் P. செல்வரதி (SFRமகளிர் கல்லூரி, சிவகாசி) அவர்களை இக்கிளை நன்றிபாராட்டி வரவேற்கிறது.
8. ஆயுள் சந்தா ரூ.1000/- மற்றும் செய்தி மடல் சந்தா ரூ.300/- செலுத்தி AIFRUCTO ஆயுள் உறுப்பினராக தங்களை இணைத்துக் கொண்ட கீழ்க்கண்ட உறுப்பினரை இக்கிளை நன்றி பாராட்டி வரவேற்கிறது.
   சென்ற மாத தொடர்ச்சி ......164. முனைவர் P. செல்வரதி..... தொடரும்
9. கிளைப் பொருளாளர் ராஜசேகரன் அவர்கள் இம்மாதம் கட்டிட நிதி வழங்கிய உறுப்பினர்களின் பெயர்களையும் அவர்கள் அளித்த தொகையையும் வாசிக்க கூட்டத்தில் நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவிக்கப்பட்டது. தலா ரூ.7000/ கட்டிட நிதி வழங்கிய பேராசிரியர்கள். சென்ற



Generated by Foxit PDF Creator © Foxit Software
http://www.foxitsoftware.com For evaluation only.



மாத தொடர்ச்சி....

ANJA கல்லூரி, சிவகாசி 105. Dr. M.K. ராஜன்......தொடரும்

10. பேராசிரியர் நரசிங்கம் அறக்கட்டளையிலிருந்து பெறப்பட்ட நிதியில் இருந்து விருதுநகர் சப்தகிரி சிறப்புப்பள்ளிக்கு ஒரு குளிர்சாதன பெட்டியும் சிவகாசி அழகன் காப்பகத்திற்கு ஒரு கண்ணாடி அலமாரியும் இரண்டு இரும்பு ரேக்கும் வாங்கி வழங்கப்பட்டது. பேரா. நரசிங்கம் அறக்கட்டளைக்கு இக்கிளை நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.
11. சிவகாசி Dr. அனில்குமார் கண் மருத்துவமனையில் இருந்து அடுத்த மாதம் நமது கிளை கூட்டத்தில் ஒரு Eye Camp நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது. மேற்படி மருத்துவமனை பொருப்பாளர் திரு. முனீஸ்வரன் அவர்கள் நடைபெற இருக்கும் Eye Camp பற்றி விளக்கினார். அவருக்கு கிளையின் சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது.
12. வருமான வரி கணக்கிட 80 C மற்றும் 80 D – ன் கீழ் உள்ள சேமிப்புக்கான அத்தாட்சி நகல்களை தங்களது கருவூலங்களில் 2020 ஜனவரி மாதம் 10 தேதிக்குள் கொடுக்கும்படி உறுப்பினர்களை இக்கிளை கேட்டுக் கொள்கிறது.




பேரா. நரசிங்கம் அறக்கட்டளை நிதியில் இருந்து அழகன் காப்பகத்திற்கு வழங்கிய கண்ணாடி அலமாரியும் இரும்பு ரேக்குகளும். அதற்குரிய சாவியை பொதுக்குழு உறுப்பினர் ராஜகுமார், அவர்கள் வழங்குகிறார். உடன் கிளை பொருப்பாளர்கள். பேரா. நரசிங்கம் அறக்கட்டளை நிதியிலிருந்து சப்தகிரி சிறப்புப் பள்ளிக்கு வாங்கின குளிர்சாதன பெட்டியின் சாவியை கிளைத்தலைவர் Dr. N. இன்பமணி அவர்கள் வழங்குகிறார். உடன் கிளை பொருப்பாளர்கள்.

**V. ஹரிராஜன்**
செயலர், விருதுநகர் கிளை





## கோவை - நீலகிரி கிளை

இக்கிளையின் கூட்டம் 14.12.2019 சனிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு கோவை அரசு கலைக் கல்லூரியில் நடைபெற்றது. தலைவர் மு. சக்கரபாணி வந்திருந்த உறுப்பினர்களையும், சேலத்திலிருந்து வந்திருந்த பேரா. S.P. ராஜன் அவர்களையும் வாழ்த்தி வரவேற்றார்.

**இரங்கல்:–**

1. அகிலபாரத மூத்தகுடிமக்கள் மற்றும் ஓய்வூதியர் கூட்டு அமைப்பின் மாநிலத்தலைவர் அவினாசி திரு அ. சாமிநாதன் அவர்கள் 09.10.2019 அன்று மரணமடைந்தார். ஓய்வூதியர்களுக்கு அவர் ஆற்றிய அரும் பணியை தலைவர் உறுப்பினர்களுக்கு விளக்கினார்.
2. கோவை PSG கலைக்கல்லூரி மற்றும் அரசு கலைக்கல்லூரி ஆங்கிலத்துறைகளில் பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற நம் கிளை உறுப்பினர் பேரா. B.N. பாலகிருஷ்ணன் அவர்கள் 30.11.2019 அன்று மரணமடைந்தார்.
3. நம்கிளை உறுப்பினரும் உதகை அரசு கலைக்கல்லூரியில் முதல்வராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற, முனைவர் திருமதி K. சுந்தரவல்லி அவர்களின் கணவர் திரு. ரகுபதி அவர்கள் 23.11.2019 அன்று மரணமடைந்தார்.
4. கோவை அரசு கலைக்கல்லூரியின் கணிதத் துறையின் பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற நம்கிளை உறுப்பினர் பேரா. திருமதி ஜெயந்தி சிவா நந்தா அவர்களின் மூத்த மகன் (32) 27.11.2019 அன்று மரணம் அடைந்தார். இவர்கள் ஆன்மா சாந்தி அடையவும், உறவினர்கள் ஆறுதல் பெறவும் உறுப்பினர்கள் எழுந்து நின்று இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தினர்.

17.12.2019 ஓய்வூதியர்தினம். மத்திய அரசின் பாதுகாப்புத்துறையில் பொருளாதார ஆலோசகராகப் பணியாற்றி ஓய்வுபெற்ற திரு D.S நகரா அவர்களின் முயற்சியால் உச்ச நீதிமன்றம் 17.10.1982 அன்று வழங்கிய வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பால் அனைவரும் ஓய்வூதியம் பெறும் நிலையை உருவாக்கியவர். அவர் நினைவாக அந்நாளை நாம் ஓய்வூதியர் தினமாக கொண்டாடுகிறோம் என்பதை தலைவர் உறுப்பினர்களுக்கு விளக்கமாக எடுத்துக் கூறினார்.

**நூல் அறிமுகம்:** கோவை அரசுகலைக்கல்லூரி வணிகவியல் துறை பேராசிரியராகவும், சென்னை இந்து கல்லூரி போன்ற கல்லூரிகளில் முதல்வராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர் பேரா. S.P. ராஜன் அவர்கள், தான் எழுதிய 'கனவில் கண்ட காந்தி மகான்' என்ற கட்டுரையை (தமிழ் – ஆங்கிலம்) நூல் வடிவில் அச்சிட்டு, அது பற்றிய சிறப்பினை உறுப்பினர்களுக்கு விளக்கமாக கூறி, வந்திருந்த உறுப்பினர்களுக்கு அந்நூலினை அன்பளிப்பாக வழங்கினார். அவருக்கு தலைவர் கிளை சார்பில் நன்றி கூறினார். பின்னர் தலைவர், தலைமைக் கழகத் தேர்தல் 28.12.2019 திருச்சியில் நடைபெறும் விவரத்தைக் கூறினார்.

பின்னர் இணைச்செயலர் பேரா. சங்மேஸ்வரன் இந்த மாதம் பிறந்தநாள் காணும் பேராசிரியர்கள் பெயர்களைப் படித்து அவர்களுக்குப் பிறந்தநாள்

வாழ்த்துக் கூறினார். உறுப்பினர்களும் கரவொலி மூலம் வாழ்த்து தெரிவித்தனர். இவர்களில் கீழ்க்கண்ட பேராசிரியர்கள் வந்திருந்த உறுப்பினர்களுக்கு இனிப்பு, காரம், தேநீர் வழங்கி மகிழ்ந்தனர். அவர்கள் வருமாறு:- பேராசிரியர்கள்.Dr. M. மகாலிங்கம், Dr.K. சுந்தரம், Dr. D. ராஜன், Dr. T. நல்லுசாமி, Dr. T. ஜலந்தரதாஸ், K. ரத்ன சபாபதி ஆவர். அடுத்து கிளை பொருளாளர் முனைவர் K. சுப்பிரமணியன் பேசும்போது, இதுவரை கட்டிட நிதி வழங்கியவர்கள், AIFRUCTO ஆயுள் சந்தா வழங்கியவர்கள், சந்தா செலுத்தியவர்கள் பற்றிய விவரங்களை உறுப்பினர்களுக்கு விளக்கிக் கூறினார். அவர் வந்திருந்த உறுப்பினர்களுக்கு நன்றி கூற கூட்டம் நிறைவு பெற்றது. அடுத்து தலைவர் உறுப்பினர்களுக்கு கிறிஸ்துமஸ், ஆங்கிலப் புத்தாண்டு, பொங்கல் திருநாள் வாழ்த்துக்களைத் தெரிவித்தார். **அடுத்த கூட்டம் வரும் 2020 புத்தாண்டில், 11.01.2020 சனிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு கோவை அரசு கலைக்கல்லூரியில் நடைபெறும். உறுப்பிர்கள் அதிக எண்ணிக்கையில் கலந்து கொள்ள வேண்டுகிறோம்.**

முனைவர் **மு. சக்கரபாணி**
தலைவர், கோவை – நீலகிரி கிளை.

## திருச்சி கிளை

14.12.2019 சனிக்கிழமை மாலை 5 மணி அளவில் திருச்சி, தில்லைநகர், கி.ஆ.பெ.விசுவநாதம் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் இக்கிளையின் பொதுக்குழு கூட்டம் கிளைத்தலைவர் முனைவர் ந.செல்லையா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இணைச்செயலர் பேரா.கு.கண்ணன் அவர்கள் வரவேற்புரையாற்றினார். மயிலாடுதுறை மகளிர் அரசு கலைக்கல்லூரியில் முதல்வராகப் பணியாற்றி ஓய்வுபெற்ற பேரா. R. மனோகரன் அவர்களின் மனைவி திருமதி. இந்திரா மற்றும் இக்கிளையின் முன்னாள் தலைவர் முனைவர் S. ஜுலியன் அவர்களின் மகன்வழிப் பேரன் செல்வன் ஜெஸ் இமானுவேல் ஆகியோரின் மறைவிற்கு ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. பேரா. R. ஆறுமுகம் அவர்கள் பொதுக்குழு உறுப்பினராக நியமனம் செய்யப்பட்டார் என்ற செய்தி தெரிவிக்கப்பட்டது. பின்னர் உறுப்பினர்களின் கேள்விகள் மற்றும் சந்தேகங்களுக்கு கிளைச்செயலர் மற்றும் கிளைத்தலைவர் ஆகியோர் விளக்கமளித்தனர். கிளையின் இரண்டு வங்கிக் கணக்குகளையும் செயலர் பேரா.சி.அப்பாவு, பொருளாளர் ப.பன்னீர் செல்வம் ஆகியோர் இணைந்து இயக்குவது என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கிளையின் செயல்பாடுகள் தொடர்பாக வெளியூர் பயணம் மேற்கொள்ளும் பொறுப்பாளர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு உரிய விதிகளின்படி பயணப்படி வழங்குவது எனத் தீர்மானிக்கப்பட்டது. கிளையின் மாதாந்திரக் சுட்டச் செலவுகளை கிளை ஏற்றுக்கொள்வது என்பதற்கும் பிறந்தநாள் காணும் பேராசிரியர்கள் கிளைக்கு



Generated by Foxit PDF Creator © Foxit Software
http://www.foxitsoftware.com For evaluation only.



நன்கொடை கொடுக்க விரும்பினால் பெற்றுக் கொள்வது என்பதற்கும் கிளையின் ஒப்புதல் பெறப்பட்டது. 2016-17 - 2018-19 முடிய மூன்று ஆண்டுகளுக்கான கிளையின் வரவு – செலவு கணக்குகளை அடுத்த பொதுக்குழு கூட்டத்தில் பரிசீலனை செய்வதற்கும் கிளையின் ஒப்புதல் பெறப்பட்டது. அடுத்ததாக டிசம்பர் மாதம் பிறந்தநாள் காணும் பேராசிரியர்களின் பெயர்களை முனைவர் P. பன்னீர் செல்வம் வாசித்தார். உறுப்பினர்கள் மகிழ்ச்சியுடன் கையொலி எழுப்பிதங்கள் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டனர். பேரா.கு.கண்ணன் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவுபெற்றது. **அடுத்த பொதுக்குழு கூட்டம் திருச்சி, தில்லைநகர் கி.ஆ.பெ.விசுவநாதம் மேல்நிலைப் பள்ளியில் 11.01.2020 சனிக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறும் எனவும், உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் எனவும் அன்புடன் வேண்டப்படுகிறது.**

பேரா. **சி. அப்பாவு,**
செயலர், திருச்சி கிளை.

## செய்யாறு கிளை

செய்யாறு கிளையின் மாதாந்திர பொதுக்குழு கூட்டம் 22-12-2019 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 10.30 மணிக்கு நடைப்பெற்றது. கூட்டத்திற்கு தலைமையேற்ற கிளை தலைவர் பேரா.எஸ்.சீனிவாச செட்டி அவர்கள், "தம்மின் பெரியார் தமரா ஒழுகுதல் வன்மையுள் எல்லாம் தலை" என்னும் குறளின் விளக்கத்தோடு கூட்டத்தைத் தொடங்கினார். இன்றைய மாதத்தில் பிறந்தநாள் கண்ட பேரா.ஆர்.வி.ரகுராமன், முனைவர்.எஸ்.ஜேசுராஜ், பேரா.எம்.எல்.ராகவன் ஆகியோருக்கும் மணநாள் கண்ட பேரா.எம்.வேலுசாமி அவர்களுக்கும் பொதுக்குழு பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்தது. செயலரின் அறிக்கைக்குப்பின் மாநிலத்தேர்தலின் தற்போதைய நிலை குறித்து பேரா.டி.ஜி.நாகராஜன் விளக்கிய பின்னர் அது குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது. பொருளாளர் முனைவர்.ஏ.மெய்யப்பன் அவர்கள் நிதிநிலை குறித்து விளக்கினார். பின்னர், இந்த நிதியாண்டின் வருமான வரி படிவம் தயாரிப்பு தொடர்பான விடயங்களை கவனித்துக்கொள்ள முனைவர்.ஆர்.அஞ்சப்பன் அவர்கள் ஒரு மனதாக நியமிக்கபட்டார். **அடுத்த கூட்டத்தை ஜனவரி முதல் வாரத்தில் கூட்டுவது என்ற முடிவோடு முடிவடைந்த இக்கூட்டத்தில் துணைத்தலைவர் பேரா.எம்.கந்தசாமி அவர்கள் நன்றியுரை ஆற்றினார்.**

பேரா. **வி. சிவப்பிரகாசம்,**
செயலர், செய்யாறு கிளை.